# லூனா-16 சந்திர மண்ணுடன் வந்திறங்கியது!

Registered as a News Paper in Ceylon

விலை சதம 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49


போன் : 389

மலர் 12

இதழ் 226

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 9 றஜபு 23 வெள்ளிக்கிழமை (25-9-70)




பொ. அம்பலவாணர்

தங்க வைர

நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட்,

யாழ்ப்பாணம்.

கல்வனைஸ்ட்

தண்ணீர் தாங்கிகள்

[GL WATER TANK]

400 கலன்களிலும்

மற்றும் தேவையான அளவுகளிலும்

கிடைக்குமிடம்:-

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7130


## ரஷ்யாவின் உலக சாதனை

மாஸ்கோ, செப் 24 சந்திரமண்ணுடன் ஆளில்லாத ரஷ்ய கலம் லூனா-16 இன்று பத்திரமாக பூமியில் வந்திறங்கியது.

அண்டவெளியில் சாகசப் பயணம் செய்து, சந்திரனில் இறங்கி சந்திரமண்ணை எடுத்துக்கொண்டு திரும்பிய ஆளில்லாத லூனா-16 தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு சோவியத் ரஷ்யப் பிரதேசமான கசகிஸ்தானில் வந்திறங்கியது. முன்னரே திட்டமிட்டபடி குறிப்பிட்ட இடத்தில் லூனா-16 மெதுவாக இறங்கியது.

இலங்கைநேரப்படி சரியாக காலை 10-56 மணிக்கு இது தரையில் இறங்கியது.

ஆளில்லாதகலமொன்றின் மூலமாக சந்திர மண்ணைப் பூமிக்குக் கொண்டுவந்தது இதுவே முதல்தடவையாகும்.



யன்மா "டீசல்" இரு சில் டிருக்டரைப் பாவித்து யாழ். மாவட்ட உழவுப் போட்டியில் பரிசு பெற்றுக்கொண்ட 'மிருசுவில் படித்த மங்கையர் குடியேற்றத்தைச் சேர்ந்த செல்வி ஆர். இராசகுமாரி

# 'யு.என்.பி. ஏற்படுத்திய சிக்கலை நீக்க மந்திரிகள் வெளிநாடு செல்கின்றனர்'

## ஜே. ஆருக்கு கெனமன் பதில்

### ஆட்சிமன்றத்தில் லுசாக்கா மகாநாடுபற்றியும் விவாதம்

கொழும்பு, வியா யு என் பி அரசாங்கம் மாட்டி வைத்த சிக்கலிலிருந்து நாட்டை மீட்பதற்காகவே இன்றைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் இன்று

நாட்டை மிக மோசமான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டதென்றும் இந்த நிலைமையைச் சீர்படுத்தவே நிதி அமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர்திரு ரி பி இலங்கரத்தின ஆகியோர் வெளிநாடு சென்றிருக்கிறார்கள் என்றும் அவர்கள் உல்லாசப் பிரயாணம் செல்லவில்லையென்றும் திரு கெனமன் கூறினார்

லுசாக்கா மாநாட்டினால் இலங்கைக்கு என்ன உபயோகம் [illegible]று எதிர்க்கட்சித்

கூறிவிட்டு அதே சமயம் அவர்கள் இங்கு நிற்க வேண்டிய முக்கிய பிரச்னைகள் உள்நாட்டில் நிறைய இருக்கின்றன வென்றும் சான்ஞர், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றுக்குறைப் பிச்னையும் உள்நாட்டில் இன்றைய மிக நெடுக்கடியான பிரச்னைகளென்றும் வெளிநாட்டுப் பிரயாணங்களில் நடைமுறைக்குச்சாத்தியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்றும் திரு ஜயவர்த்தன [illegible]றி

கள் நாடுகள் என்பதற்குச் சரியான விளக்கம் கொடுப்பது கஷ்டமென்று கூறிய

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ் நகரில்

## பண்டாரநாயக்கா நினைவு தினவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி பண்டாரநாயக்கா நினைவு தினவிழா யாழ். நகரமண்டபத்தில் நாளை மாலை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வடபிரதேச அமைப்பாளர் திரு எம். துரைராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது. தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே; பி, ரத்னாயக்கா, மக்கள் சீனக்குடியரசுக்கு நியமிக்கப்பட்ட இலங்கைத் தூதர் திரு. ஐ; காரைக்கொட ஆகியோர் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார்கள்.

கூட்ட முடிவில் விசேஷபஸ் வசதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளை சார்பில் யாழ்ப்பாணத்தில் நாளை இத்தினம் கொண்டாடப்படும் என்றும் நாளைக் காலை 10 மணிக்கு பெருமாள் கோவிலில்பூசை நடைபெறும் என்றும் கிளைக்காரியாலயத்தில் நாளைக் காலைவெள்ளைக் கொடி பறக்கவிடப்படும் என்றும் யாழ்கிளை தெரிவிக்கிறது.

நாளை காலை சுபநேரத்தில் ஆலயங்களில் மணி அடிப்ப

# துண்டு பிரசுரம் வினியோகித்தவர் பொலிசாரிடம் சிக்கினர்

## பண்டாரநாயக்கா நினைவுதினத்தை பகிஷ்கரிக்கும்படி கேட்கப்பட்டதாம்

கொழும்பு, வெள்ளி நாளை கொண்டாடப்படவிருக்கும் பண்டார நாயக்கா நினைவுதினத்தை தமிழ் மக்கள் பகிஷ்கரிகக வேண்டும் என்று கோரும் அச்சிடப்பட்ட பிரசுரங்களை கொழும்பு- யாழ்ப்பாணம் ரயில் வண்டியில் விநியோகித்துக் கொண்டிருந்த

பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

திரு. பண்டாரநாயக்கா தமிழ்மக்களின் விரோதி தமிழ் மக்களுக்கு அவர் எதுவுமே செய்யவில்லையென்று அந்தத் துண்டுப்பிரசுரங்களில் எழுதப்பட்டிருந்தனவாம்,

விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளது, ஒருசிலர் குறிப்பிட்ட துண்டுப் பிரசுரங்களை தமது அச்சகத்தின் வர்த்தகப் பகுதியில் அச்சிட்டதாகவும் 5000 பிரதிகள் அதில் அச்சடிக்கப்பட்டதாகவும் அச்சகப் பொறுப்பாளர் பொலிசாரிடம் கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் திரு. கே. பி. ரத்நாயக்கா, மக்கள் சீனக்குடியரசுக்கு நியமிக்கப்பட்ட இலங்கைத் தூதர் திரு. ஐ. காரைக்கொட ஆகியோர் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார்கள்.

வடபிரதேச பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கமிட்டி இந்த விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளுக்கும் செல்வதற்கு, என்றும் கிளைக்காரியாலயத்தில் நாளைக் காலைவெள்ளைக் கொடி பறக்கவிடப்படும் என்றும் யாழ்கிளை தெரிவிக்கிறது.

நாளை காலை சுபநேரத்தில் ஆலயங்களில் மணி அடிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது என்றும் நண்பகல் 11 மணிக்கு, கிளைக் காரியாலயத்தில் வழிபாடு நடைபெறும் என்றும் யாழ். கிளை மேலும்தெரிவிக்கிறது

நாடுகளுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன்இன்று ஆட்சிமன்றத்தில் கூறினர். சென்ற ஐந்து வருட காலத்தில் வெளிநாட்டுக் கடன்களை யு என் பி அரசாங்கம்மும் மடங்காக அதிகரித்து வைத்திருப்பதாகவும் வெளிநாட்டுக் கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் செலுத்துவதற்கு ஆண்டுதோறும் முப்பது கோடி ரூபாய் தேவைப்படுவதாகவும் திரு கெனமன் தெரிவித்தார்.

லுசாக்காவில் நடைபெற்ற நடுநிலைமை நாடுகளின் மகாநாடு ஒருவெற்றியென்றும் வீடமைப்பு அமைச்சர் சொன்னர்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உபமானயப் பிரேரணைமீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே ஆர் ஜயவர்தன கூறிய சில கருத்துக்களுக்குப் பதிலளிக்குமுகமாக திரு கெனமன் பேசினர்

முன்னைய அரசாங்கம் எதுவித திட்டமுமின்றி நடந்து கொண்டதால் என்றும் அவர்கள் உல்லாசப் பிரயாணம் செல்லவில்லையென்றும் திரு கெனமன் கூறினர்

லுசாக்கா மாநாட்டினல் இலங்கைக்கு என்ன உபயோகம் ஏற்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று ஆட்சிமன்றத்தில் கேட்டபோது அரசாங்க தரப்பிலிருந்து அவருக்கெதிராகச்சரமாரியாகக் கண்டனக்குரல்கள் கிளம்பின.



லுசாக்கா மகாநாட்டின் விளைவாக தென்னுபிரிக்காவுடனுள்ள ஒன்பது கோடி ரூபாய் வருமானம் கிடைக்கக்கூடிய தேயிலைவர்த்தகத்தைத்துண்டித்துக்கொள்வது முட்டாள் தனம் என்று திரு.ஜே. ஆர். ஜயவர்த்தன கூறினர்.

இச்சமயம் சபையில் பிரதமர் சமூகமாயிருக்கவில்லை.

திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் சர்வதேச மகாநாடுகள் முக்கியம் தானென்றும் அவற்றுக்கு அமைச்சர்கள் செல்லத்தான் வேண்டுமென்றும் நெருக்கடியான பிரச்சினை என்றும் வெளிநாட்டுப் பிரயாணங்களில் நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்றும் திரு ஜயவர்த்தன கூறினர்,

கூட்டுச்சேரா நடுநிலைமை

...க்கா நினைவுதினத்தை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோரும் அச்சிடப்பட்ட பிரசுரங்களை கொழும்பு- யாழ்ப்பாணம் ரயில் வண்டியில் விநியோகித்துக் கொண்டிருந்த சிலரைப் பொலிசார் நேற்றுக் கைது செய்ததாக

திரு. பண்டாரநாயக்கா தமிழ்மக்களின் விரோதி தமிழ் மக்களுக்கு அவர் எதுவுமே செய்யவில்லையென்று அந்தத் துண்டுப்பிரசுரங்களில் எழுதப்பட்டிருந்தனவாம்,

இதுசம்பந்தமாககொழும்பிலுள்ள அச்சகமொன்று தமது அச்சகத்தின் வர்த்தகப் பகுதியில் அச்சிட்டதாகவும் 5000 பிரதிகள் அதில் அச்சடிக்கப்பட்டதாகவும் அச்சகப் பொறுப்பாளர் பொலிசாரிடம் கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரவு தபால் வண்டியில் நேற்று இச் சம்பவம் நிகழ்ந்தது.

# அம்மான் நகர்

# பிணக்காடாக காட்சி தருகிறதாம்

டமாஸ்கஸ், செப். 24

ஜோர்டான் தலைநகரான அம்மானில் எங்கு பார்த்தாலும் பிணங்கள் கிடப்பதாக அங்கிருந்து டமாஸ்கஸ் வந்து சேர்ந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் ஜோர்டான்அரசபடைகள் சிறைப்பிடிக்கப்பட்ட நான்கு பிரதான கொமாண்டோ தலைவர்களை மன்னர் ஹுசேன் விடுதலை செய்திருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

இதேசமயம் ஜோரடான் நெருக்கடியில் நேரடியாகத் தலையிடும்படி பாலஸ்தீன விடுதலைஇயக்கமான அல்பத்தா ஹ்தலைவர் யாஸிர் அரபாத். ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் அதிபர் நாஸரைக் கேட்டிருக்கிருர். மன்னர் ஹுசேன் பாலஸ்தீன அரபுக் கொமாண்டோக்களுடன் செய்துகொண்டுள்ளதாக அறிவித்துள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரபாத் நிராகரித்துவிட்டார்

மேற்காஸிய நிலைமை குறித்து அமெரிக்க அதிபர் நிக்ஸன் தமது பாதுகாப்பு அதிகாரசபையுடன் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# பாடசாலைக் கிணற்றுள் கிடந்த சிறுமியின் சடலம்

## காதணியைக் காணவில்லை என்கிருர் தந்தை

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணுர்பண்ணை கில்னர் ஒழுங்கையிலுள்ளபாடசாலை வளவுக்கிணற்றுக்குள்நேற்று முன்தினம் இறந்துகிடக்கக் காணப்பட்ட எட்டு வயதுச் சிறுமியான ஞானேஸ்வரியின் மரணம் சம்பந்தமாக யாழ். நகர திடீர்மரண விசாரணை அதிகாரி திரு, நா இராசநாயகம் மரண விசாரணை நடத்தினர். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட அவர் இன்று டாக்டரின் அறிக்கை கிடைத்ததும் தமது தீர்ப்பைத் தெரிவிப்பார். ஆனாலும் மரணவிசாரணையில்கிடைத்த சாட்சியங்களைக்கொண்டு சிறுமியின் மரணம் சம்பந்தமாக மேற்கொண்டு புலன்விசாரணை செய்யுமாறு அவர் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்

ஞானேஸ்வரியின் மரண விசாரணையின்போதுமாண்ட சிறுமியின் தந்தையார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

பாடசாலை நண்பகல் 12-40க்கு விடுவது வழக்கம் பிற்பகல் ஒரு மணிக்குள் பிள்ளை வீட்டுக்குவந்துவிடும் சம்பவதினம் பிள்ளை வீட்டுக்குவராததால்பாடசாலைக்குச் சென்று தலைமைஆசிரியரிடம் விசாரித்தேன். பிள்ளை வேறு வழியாக வீட்டுக்குச் சென்றிருக்கலமென்று அவர் சொன்னர். நான்வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டு மீண்டும் தலைமையாசிரியரிடம் சென்றபோது தேடிப்பார்க்கும்படியும் இல்லையேல் பொலிஸில் தெரிவிக்கும்படியும் கூறி ஒரு துண்டும் தந்தார். மீண்டும் வீட்டுக்குச் சென்று திரும்பி மூன்ருவது தடவை தலைமையாசிரிடம் சென்றபோது தாம் மலசல கூடத்துக்குச்சென்று திரும்பும் வழியில் கிணற்றுள் எட்டிப்பார்த்ததாகவும் அப்போது கிணற்றுநீர் கலங்கியிருந்ததைக் கண்டு உதவியாசிரியரை அழைத்துக்காட்டியபோது கிணற்றுள் ஓர் உருவம் கிடப்பதாகக் கூறியதாகச் சொன்னதாகவும் தெரிவித்தார். இதன்பின் பொலிசுக்கு அறிவித்தேன்.

தகப்பன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தனது பிள்ளையின் காதுகளில் காதணிகளிருந்ததாகவும் அவற்றை இப்போது காணவில்லையென்றும் கூறினர்.

வகுப்பு ஆசிரியை சாட்சியமளிக்கையில் பிள்ளை துடினமான பிள்ளையென்றும் சம்பவதினம் பாடசாலைமுடிந்து பிள்ளை வீட்டுக்குச் சென்றதென்றும் கூறினர்.

தலைமையாசிரியரும் சாட்சியமளித்தார்.

சிறுமியின் சடலம் கிணற்றுள்ளிருந்து எடுக்கப்பட்டபோது வாயைச்சுற்றி இரத்தம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா.

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட தேப்யசுவீப் முதல்மூன்று முடிவுகள் வருமாறு:

(முதலாவது பரிசு)

39 N 0269 ரூ. 97,930

(இரண்டாவது பரிசு)

10 J 0449 ரூ. 39.172

(மூன்ரும் பரிசு)

01 O 0982 ரூ. 9,793

## தியாகலிங்கத்துக்கு கத்திக் குத்து

கொழும்பு. வியா.

அட்வக்கேட் செல்லப்பா தியாகலிங்கம் கியூ சி. கத்தியால்குத்தப்பட்ட நிலையில், கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டின் படுக்கை அறையில்வைத்து. இனம் தெரியாத சிலர் இவரைக் குத்தியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.


இயந்திரங்களிற் சிறந்தது

'டீசல்'

டீசலில் சிறந்தது

யன்மா 'டீசல்'

உலகில் மலிவானதல்ல ஆனல்

உலகிற் சிறந்தது

யன்மா 'டீசல்'

இரு சில் டிருக்டர்

ஏக விநியோகஸ்தர்கள்:

செல்வலக்ஷ்மிஸ்

யாழ்ப்பாணம், வரந்தன்


புதிய அரசியலமைப்பு:

# நகல் மசோதா முழுமையாக தயாரானபின் வெளியிடப்படும்

## கொல்வின் கூறுகிருர்

கொழும்பு, வியாழன்

புதிய அரசியலமைப்பின் முக்கிய நகல் மசோதாவை அரசியலமைப்புக் குழுவின் ஆலோசனைக்கு சமர்ப்பிக்கும்படி எனக்கு பணிக்கப்பட்டுள்ளது. நகல் மசோதா தயாராகிக் கொண்டிருக்கிறது அவற்றைத் தனித் தனியே வெளியிடுவதில் கஷ்டம் ஏற்படும், ஒன்றுக்கு ஒன்று இணைவாக இருந்த பின்னர் முழுவதும் தயாரித்து முடிந்தபின்னர் குழுவின் ஆலேரசனைக்கு இது சமர்ப்பிக்கப்படும்,

இவ்வாறு அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர், டி, சில்வா அரசியல் நிர்ணயசபைக் கூட்டம் ஆட்சிமன்றத்தில் நடைபெற்றபோது கூறினர்,

பல மகஜர்கள் மன்றங்களிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் வந்து கொண்டேயிருக்கின்றன, ஒரு சிறுவர் மன்றம் கூட ஆலோசனைகூறி மகஜர் அனுப்பி வைத்துள்ளது,இதிலிருந்துபுதிய அரசியலமைப்பில் நாட்டுமக்கள் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளனர் என்பது புலனுகிறதென்றும் கொல்வின் கூறினர், இவற்றை மொழி பெயர்த்து அறிந்து கொள்வதில்மொழி பெயர்ப்பாளர் தட்டுப்பாடு இருப்பதாகவும் கூறினர்,

இப்போது தயாராகிக் கொண்டிருக்கும் நகல்மசோதாவின் அறிக்கைகளைக்கள் ளத்தனமாக எடுத்து பத்திரிகைகளில் வெளியிடுவதில் எதுவித பலனும் ஏற்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். சபை மீண்டும் ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி கூடும்.

## அந்த நாடுகளே செலவுக்குப் பொறுப்பு

கொழும்பு, வியாழன்

சபாநாயகர்தலைமையில் ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் குழு வெளிநாடு சென்றிருப்பதில் அந்நியச் செலாவணி சம்பந்தப்படவில்லை யென்றும் அவர்கள் செல்லும் அந்தந்த நாடுகளே அவர்களின்பிரயாணச்செலவுகளை ஏற்றுக்கொண்டுள்ளனவென்றும் போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தன இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

## ஆர். ஜி. கவலைக்கிடம்

கோட்டை, வியாழன்

கடந்த மாதம் சத்திர சிகிச்சைக்காக லண்டன் சென்றுள்ள திரு ஆர் ஜி சேனநாயகாவின் நிலைமை கவலைக்கிடமாயுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது,

## பிரதமர் அறிக்கை விடுவார்

கொழும்பு, வியாழன்

லுசாக்காவில்நடைபெற்ற நடுநிலைமை நாடுகளின் மகாநாடு பற்றி அதில் கலந்து கொண்ட பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா இன்னும் சில தினங்களில் விரிவானதொரு அறிக்கையைவெளியிடுவார் என்று உதவிப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் இன்று ஆட்சிமன்றத்தில் அறிவித்தார்.

கீரிமலை

# கடலில் ஒதுங்கிய சடலம்: பொலிஸார் சங்கடம்

மாவிட்டபுரம், வியா

கீரிமலைக் கடற்கரையில் ஒதுங்கிய சடலம் பொலிசாருக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளது,

கீரிமலை ரூறிஸ்ட் ஹோட்டலுக்குப்பின் செம்மன் வாய்க்கால் கடலைக்கு அருகில் ஒதுங்கியுள்ள இச் சடலத்தை யாரும் இதுவரை அடையாளம் காட்டாததாலும் மரணத்திற்கான காரணம் இதுவரை புலப்படாததாலும் பிரேதத்தை என்ன செய்வதெனத் தெரியாது பொலிசார் அவதியுறுகின்றனர். இது ஓர் ஆணின் சடலமாகும், இது கொலையா அல்லது தற்கொலையா என்பதில் பொலிசாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இம் மரணம் குறித்து தெல்லிப்பளை பதில் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். சுந்தரமூர்த்தி விசாரணை நடத்தி பிரேத பரிசோதனை நடாத்தும்படி உத்தரவிட்டுள்ளார், விசாரணை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் எஸ். கணேசன் சார்ஜன்ட் வீரசிங்கம் ஆகியோர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## மாஸ் கோவில் வி. வி. கிரிக்கு டாக்டர் பட்டம்

மாஸ்கோ செப் 24

மாஸ்கோ பல்கலைக்கழகம் பாரத ராஷ்டிரபதி திரு வி. வி. கிரிக்கு டாக்டர் பட்டம் அளித்து இன்று கௌரவித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: G. C. E. (O/L) வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழி பகுதி I; II. புதுமுறை மாதிரி கைவினாக்கள். விலை ரூபா 3. ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2964

55 சிறி 12 ஆணி மெஸி பெர்க்குசன் றெயிலர் பெட்டி நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். S. K. M. சாலிஹு, செட்டிகுளம். 2972

### தேவை

பெண்கள்:

2 வருடம் நெசவு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. டொபி வேலைகள் தெரிந்தால் மிகவும் நன்று. போடிங் வசதி உண்டு. 30-9-70-ந் திகதி வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். இ. சபாலிங்கம், கௌரவ காரியதரிசி, நெசவு நுண்கலை நிலையம், 426, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். 2963

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - நல்லூரில் ஆறு பரப்புக் காணி முழுவதும் முப்பதாயிரம் துண்டுகளாகவும் வாங்கலாம். விபரங்களுக்கு எழுதுங்கள். வெஸ்டன்றேட்ஸ், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம். 2971

## எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, வியா

'மோட்டார் சையிக்கிளில் வந்துகொண்டிருந்த என்னை எதிரிகள் தடுத்து நிறுத்தி என்னை தாக்கியதுமல்லாமல் எனது மோட்டார் சையிக்கிலுக்கும் தீ வைத்தனர்' என கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கா. சிவலிங்கம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ் வழக்கு கரவெட்டியைச் சேர்ந்த சித்திரபுத்திரன், தங்கராசா, வல்லிபுரம் ஆகிய மூவரும் கடந்த மாசிமாதம் 26ந் திகதி அதே ஊரைச் சேர்ந்த கா. சிவலிங்கம் என்பவருக்கு அடித்தும், பணம் அபகரித்ததாகவும் பருத்தித்துறைப்பொலிசாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்டது. விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளைச் சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலை செய்தார்.


**வெஸ்லி சினிமா** (மானிப்பாய்) தினசரி 6-30, 10-00
ஜெய்சங்கர் - நிர்மலா வாணிஸ்ரீ - மனோகர் நடித்த
**காதலித்தால் போதுமா?**

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — பத்மினி — நாகேஷ் ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த
**எதிர்காலம்**

இன்று முதல்
**ஸ்ரீ காலிங்கன் - இணுவில்**
தினசரி 6-30, 10-00 போயா நாட்கள் 2-30
என். ரி. ராமராவ் — காந்தராவ்
ஜெயலலிதா (இரு வேடங்களில்)
நடித்த
**விடாக்கண்டன் கொடாக்கண்டன்**


## யாழ். மாநகரசபை கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு யாழ். மாநகர சபையில் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்துள்ளவர்களிடமிருந்து 2-10-70 நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. திறந்த வெளியரங்கில் மலசலகூடங்கள் அமைத்தல்.
2. மானிப்பாய் வீதி வடிகால் அமைத்தல்.

கேள்விக்காரர் அனைவரும் கேள்விகள் திறக்கப்படும் 2-10-70 பி.ப. 3-30 மணிக்கு எனது அலுவலகத்தில் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் 28-9-70 நண்பகல் 12-00 மணிவரை ரூபா 25/- கேள்வி வைப்புப்பணமாகவும் ரூபா 5/- படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப் பிரதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்.
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
21-9-70. 2472

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 25—9—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணரிந்தமிழ், 7-45 சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

## காங்கேசன்துறை பட்டினசபை கேள்விப்பத்திர விளம்பரம் 1971

மேற்படி காங்கேசன்துறைப் பட்டின சபைக்குச் சொந்தமான காங்கேசன்துறைப் பொதுசன சந்தைக்குள் இருக்கும் 1-ம் 2-ம், 3-ம் இலக்க முடைய மாட்டிறைச்சிக் கடைகளும் 1-ம், 2-ம் ஆட்டிறைச்சிக் கடைகளும், 1-ம், 2-ம் கோழியிறைச்சிக் கடைகளுக்கும் கேள்விப் பத்திரங்கள் மூலம் 1971-ம் ஆண்டிற்கு குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

தற்பொழுது இருக்கும் மாடு, ஆடு வெட்டும் தொழுவம் மாற்றப்படின் குத்தகை எடுக்கும் நபர் தமது செலவிலேயே புதிய தொழுவத்திலிருந்து கடைகளுக்கு இறைச்சியை ஏற்றிச் செல்லவேண்டும். மாட்டிறைச்சி பின்வரும் விலை விகிதாசாரப்படியே விற்கப்படவேண்டும். எலும்புடன் 1 ருத்தல் விலை ரூபா 1-20 சதம். எலும்பு தவிர்ந்து 1 ருத்தல் விலை ரூபா 1-35 சதம்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் சபையினால் அதற்கென வழங்கப்படும் நகல், பத்திரங்களில் நிரப்பப் பெற்று, இணைப்பிரதிகளாக அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் யாவும் 10-10-70-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாகச் சபை அலுவலகத்தில் ரூபா 25/-பிணைப் பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும், 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி 12 மணிக்கு முன்னதாகச், சீல் வைத்த காயிதக் கோவையில், இடதுபக்கத்தில் விண்ணப்பிக்கும் கடையின் பெயரைக் குறிப்பிட்டு, தலைவர், பட்டினசபை, காங்கேசன்துறை என்ற விலாசத்திற்கு விலாசமிடப்பட்டு சபையில் வைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் பெட்டியிலோ, அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ சபை அலுவலகத்தில் சேரும்வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.

எந்த ஒரு விண்ணப்பத்தினையோ, அன்றேல் எல்லா விண்ணப்பங்களையுமோ எக்காரணமின்றி நிராகரிக்கவோ அன்றேல் ஏற்றுக்கொள்ளவோ சபைக்கு உரிமையுண்டு.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்,

## 'விளையாட்டினால்வரும்பயனை பெறத் தவறக்கூடாது'

புலோலி, வியா

''எமது சிந்தனைகளையும் செயல்களையும் நல்ல வழிகளில் ஈடுபடுத்தவேண்டும். இதன் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை ஏற்படுத்த வழி அமைக்கலாம்.

விளையாட்டுப்போட்டிகளில் ஏற்படும் வெற்றி தோல்விகள் மாணவரின் பிற்கால வாழ்வில் ஏற்படக்கூடிய பெரும் பிரச்னைகளைச் சாதுரியமாகத் தீர்க்கும் பண்பினை ஏற்படுத்தும். விளையாட்டுத்துறை ஒரு நல்ல சமுதாயத்தை ஆக்கித்தர வல்லது. எனவே விளையாட்டினால் வரும் பயன்களைப் பெறுவதற்கு இளைஞர் சந்ததியினர் தவறிவிடக்கூடாது.''

இவ்வாறு பருத்தித்துறை துள்ளு மீன் விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விளையாட்டு விழா பருத்தித்துறை சிவபாதம் விளையாட்டு அரங்கில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவுக்குத் தலைமை வகித்த வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து பேசுகையில், 'விளையாட்டுப்போட்டிகள் மனிதகுல ஒற்றுமையை ஏற்படுத்த வல்லதென்றும், விளையாட்டுத்துறையிலும் ஆன்மீக உறவு உண்டென்றும் சொன்னார்.

விழா ஆரம்பத்தில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அதிகாரி டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் நீச்சல் போட்டி, கட்டுமரம் வலித்தல், இயந்திர கட்டுமரம் ஓட்டுதல், மரதன், விநோத உடைப்போட்டி, மல்யுத்தம், அஞ்சல்ஓட்டம் ஆகியன இடம்பெற்றன. நாடக நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

......

## தமக்குத்தாமே 'குழிபறித்தார்'

மட்டுவில், வியாழன்

மட்டுவிலிலுள்ள ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் மீது பொய்யான குற்றச்சாட்டொன்றைச் சுமத்தி, இதுபற்றி கூட்டுறவு ஆணையாளருக்கு புகார் செய்திருந்த சங்க உபதலைவர், தான் கொண்டுவந்த குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாததைத் தொடர்ந்து தமது பதவியை இழக்கவேண்டியேற்பட்டது.

குறைந்த விலைக்கு வெங்காயக் கூடைகள் கொள்வனவு செய்து அதிகப்படியான விலைக்கு சங்கத்திற்குக் கொடுத்துச் செயலாளர் இலாபத்தை எடுத்துக் கொள்வதாக உதவி ஆணையாளருக்கு குற்றச்சாட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற திடீர் விசாரணையின் போது குறிப்பிட்ட செயலாளர் எதுவித தவறான செயலிலும் இறங்கவில்லை என்றும் அவர் நேர்மையுடனும் ஒழுங்குடனும்தன் பதவியை வகித்துவருகிறார் என்றும் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து மேற்படி சங்கநிர்வாக சபை பொய்க் குற்றச்சாட்டைக் கொண்டுவந்த உப தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியதைத் தொடர்ந்து அவர் தமது பதவியை இழந்தார்.

## இன்றைய

## சோவியத் உதவி

கோட்டை, வியா

இலங்கையின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு சோவியத் யூனியன் உதவிசெய்யவிருக்கிறது.

இத்தொழிலை விஸ்தரிக்க மீன்பிடித்தொழிலுக்கு வேண்டிய தளபாடங்கள், தொழில்நுட்ப உதவி ஆகியவற்றைச்செய்யவிருக்கிறது. இதேவேளையில் இலங்கை சோவியத்யூனியன் வர்த்தகத்தொடர்பையும் வலுப்படுத்த சோவியத்யூனியன் தீர்மானித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ச ஏற்கனவே மேற்படி உதவிகள் சம்பந்தமாக இலங்கையிலுள்ள சோவியத்யூனியன் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

— —

## விவசாய வீரருக்கு சம்பளம்

உடுப்பிட்டி, வியா

கடந்த யூலை மாதம் 12-ம்

## 'விளையாட்டுப்போட்டிகள் ஐக்கியத்தை ஏற்படுத்தும்'

— வி. பொன்னம்பலம்

வல்வெட்டித்துறை, வியா

''விளையாட்டுக்கள் மூலம் மக்களிடையே ஐக்கியத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த முடியும். ஏற்ற தாழ்வற்ற ஒரு சமூகம் உருவாகவும் இது வழி வகுக்கும்''

வல்வெட்டி சிவகணேச சனசமூக நிலையத்தின்பதினைந்தாவது வருடாந்த விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. வி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

வல்வெட்டி சைவ வித்தியாலய விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் அவர் மேலும் பேசுகையில், ''சமீபத்தில் நான் பார்த்த விளையாட்டுப் போட்டிகளில் மிகவும் சிறப்பாகவும் கட்டுப்பாடாகவும் இவ்விளையாட்டுவிழா நடந்ததென்று கூறலாம். வல்வெட்டிப் பகுதி இளைஞர்களின் திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது'' என்றும் கூறினார்.

சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய மூன்று இல்லங்களிடையேயும் நடந்த இவ் விளையாட்டு விழாவில் காலை சிறப்பு நிகழ்ச்சிகளாக 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், இரவு நிகழ்ச்சியாக மல்யுத்த மோதலும் இடம் பெற்றது.

விளையாட்டு விழாவை உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் ஆரம்பித்து வைத்தார். வெற்றி பெற்ற வீரர்களுக்கு திரு. வி பொன்னம்பலம் பரிசில்களை வழங்கினார்.

— —

## கைலஞ்ச வழக்கு தள்ளுபடி

திருமலை, வியா

விவசாயி ஒருவரிடம் இருந்து 250 ரூபா கைலஞ்சம் வாங்கியதாக குடியேற்ற அதிகாரி ஒருவருக்கு எதிராக் திருகோணமலை பொலிசார் தாக்கல் செய்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கை திருகோணமலை நீதிபதி திரு டி. சி. டபிள்யு விக்கிரமசேகரா விசாரணை செய்தார்.

— —

## ரூபா 1,15,000 கொடுக்கவேண்டும்

கோட்டை, வியாழன்

## வேலணை ஸ்ரீ ல. சு. கிளை

வேலணை, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேலணைக் கிளை அமைப்புக்கூட்டம் திரு. கந்தையா தலைமையில் வேலணை அம்மன் கோவில் வீதியில் நடைபெற்றபோது பின் வருவோர் வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு. ஆ. கந்தையா உபதலைவர்கள்: திரு. செ. இராசதுரை, திரு. க. பேரம்பலம், திரு. பொ. நமசிவாயம், திரு. க. இராமசாமி செயலாளர் திரு. பொ. தியாகராசா உபசெயலாளர்கள் திரு. க. ஜெயச்சந்திரன், திரு. க. கனகசபாபதி பொருளாளர் திரு. எ. செல்வராசா,

11 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

— —

## பரீட்சை முடிவு

கோட்டை, வியா

கொழும்பு ஆயுர்வேதக் கல்லூரியில் இந்த ஆண்டு பிரவேசப் பரீட்சையில் ஆயுர்வேதப் பிரிவில் 39 மாணவரும், சித்தவைத்தியப் பிரிவில் 3 மாணவருமே சித்தியடைந்துள்ளனர். யூனானி பிரிவில் ஒருவரும் சித்தியடையவில்லை.

வருடந்தோறும் 75 மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்றுவருகின்றனர். இவ் வருடம் 42 பேர் மட்டும் தேறியுள்ளது குறித்து இங்கு பெரும் அதிருப்தி நிலவுகிறது.

— —

## கட்டிடம் பூர்த்தி

அம்பன், வியாழன்

அம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டிடவேலையை அம்பன் பெற்றோர் ஆசிரியர் சங்கமே பொறுப்பேற்றுச் செய்துமுடித்துள்ளது. பாடசாலை கட்டுவதற்கு தேவையான பனைமரங்களை அவ்வூர்ப் பொதுமக்களே நன்கொடையாக வழங்கினர். அரசினர் மதிப்புத்திட்டத்தைவிட பெரிதாகவே கட்டப்பட்டுள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் புதிய கட்டிடத்திறப்புவிழா நடைபெறும்.

......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாக்கண்டன்

கொடாக்கண்டன்

கடைசிவாரம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ
ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ்
நடித்த

# பூவா தலையா


The Film
**'PORTRAIT OF GREATNESS'**
in ENGLISH depicting the life Story of the late
Mr. S. W. R. D. BANDARANAIKE
(50 minutes duration) will be shown from
24 th to 30 th AUGUST at WINDSOR daily at
6 P. M. and at REGAL daily at 4 and 9 30 P.M.

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்நகர்

(2-30, 6-30, 9-30)

தாய்க்குலத்தின் பெருமைக்கும்! தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி

டைரக்ஷன்: வின்ஸன்ட்

(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணாரிந்தமிழ், 7-45 சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்

இரவு 6-10 பொலிஸ் நிகழ்ச்சி, 6-15 வயலின், 6-30 விவசாயநிகழ்ச்சி, 6-45 கண்ணகிவழக்குரை, 7-00 பண்டாரநாயக்கா ஞாபகார்த்தஉரை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லி நிகழ்ச்சி, 8-05 சித்திரம், 8-35 பேச்சு, 8-45 இஸ்லாமியகீதம், 9-30 மக்கள்யுகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

......

## புதிய நிர்வாகிகள்

தாவடி, புதன்

ஜோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையப் புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர்: திரு கனகலிங்கம், உப-தலைவர்: திரு. அ. நவரத்தினராசா, செயலாளர்: திரு. தியாகமூர்த்தி உப-செயலாளர்: திரு. இ. சிவலிங்கம், பொருளாளர்: திரு. இ. ஜெகதீஸ்வரன், உப-பொருளாளர்: திரு. அ சந்திரசேகரம்பிள்ளை. ஏழு பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரியப்பட்டது


ராஜா (யாழ்ப்பாணம்)
சரி 3 காட்சிகள்
போயா நாட்களில்4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர் விஜயா
நாகேஷ், மாதவி
நடித்த
முகூர்த்தநாள்

REGAL
Jaffna
Daily: 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Clint Eastwood,
Lee Van Cleef
in
THE GOOD, BAD, AND THE UGLY

MANOHARA
Jaffna
Daily: 4-45,7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
Rayan O'Neal
in
THE BIG BOUNCE
(Color)


யுண்டு.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் சபை அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் வந்து அறிந்துகொள்ளவும்.

இங்ஙனம்,
க. ஜெயபாலசிங்கம்,
தலைவர்,
பட்டினசபை,
காங்கேசன்துறை.

பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன்துறை.
20-9-1970. 2473

## பிரஜாவுரிமை விசாரணை

முசலி, வியா

மன்னார் மாவட்டத்திலுள்ள இந்தியா வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை கொடுப்பதற்கான விசாரணை முசலிக்காரியாதிகாரி பிரிவிலுள்ள காரியாதிகாரி பங்களாவில் பிரஜாவுரிமை ஆணையாளர் திரு. எஸ். சண்முகசுந்தரத்தால் நடாத்தப்பட்டது.

அநேக இந்தியவம்சாவழியினர் விசாரணைக்கு சமூகமளித்திருந்தனர்.

......

## 100 வது பூர்த்தி தினத்தில் மரணம்

மட்டுவில், வியாழன்

நூறு ஆண்டுகள் வரை சுகதேகியாக முருகனுக்குப் பூஜை செய்து வந்த குருக்கள் தனது 100 வயது பூர்த்தியான அன்றே இறைவனடி எய்தினர் காலமான பிரமஸ்ரீ வெங்கடாசலக் குருக்கள் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த மட்டுவில் வேதக்கேணி கந்தசாமி ஆலயத்தின் பிரதமருக்களாவர்.

தினமும் ஒருமைல் தூரம் வரை நடந்து சென்று பூஜைக்கான மலர்களைப் பறித்து வரும் இவர்மரணமாவதற்கு முன்தினம் கூட மலர்களைப் பறித்து பூஜை செய்தாராம்.

......

## கருத்தரங்கு

அம்பன், வியா

அம்பன் காந்தி சேவாக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 24-ந் திகதி அம்பன் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

நிறைவேற்றியதைத் தொடர்ந்து அவர் தமது பதவியை இழந்தார்.

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 9-ம்திகதி (25-9-70)

மேஷம்- கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம் பண பலமும் உண்டு.

ரிஷபம்- சிநேகித வழியால் சில தொல்லைகள் தோன்றி மறையும் எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

மிதுனம்- புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும் பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

கடகம்- வயிற்றுக் கோளாறுகளுக்கு இடம் உண்டு. உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் சிலருக்கு நயன ரோகமும் தென்படும்.

சிம்மம்- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். உடல் நலம் பாதிக்கப்படலாம் பெண்கள் மிகவும் அவதானம் வேண்டும்.

கன்னி- துன்பத்தின் ரேகைகள் படரும் தூக்கம் கெடும் வாகனச் சாரதிகள் மிகவும் நிதானத்துடன் இருக்கவும்.

துலாம்- நல்லதைச் செய்வீர்கள் நலன் பெருகும். அரசியல் வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகளை அணைத்துக் கொள்வர்.

விருட்சிகம்- குழந்தையொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம். சிறிய விடயத்திற்கும் அதிக கோபம் தோன்றக்கூடும்.

தனுசு-எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

மகரம்- வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாகஇருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். சிறப்பான தினம்.

கும்பம்- மறைமுகமாக நடாத்திய காரியமொன்று இன்று அம்பலமாகும். பொறுமையுடன் நடப்பது நன்று.

மீனம்- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## விவசாய வீரருக்கு சம்பளம்

உடுப்பிட்டி, வியா

கடந்த யூலை மாதம் 12-ம் திகதி கலைக்கப்பட்ட விவசாயப்படை முகாம்களின் விவசாயப்படை வீரர்களுக்கு வழங்கப்படாமலிருந்த இரண்டுமாதச் சம்பளம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது ஒவ்வொருவருக்கும் தலா 170 ரூபா தபாலில் அனுப்பப்பட்டுள்ளது.

## பரீட்சை

பண்டத்தரிப்பு, வியா

யாழ் மேற்றிராசனத்தைச் சேர்ந்த கத்தோலிக்க பாடசாலைகளுக்கான சமய அறிவுப் பரீட்சை நவம்பர் மாதம் நடைபெறவிருக்கிறது.

டபிள்யு விக்கிரமசேகரா விசாரணை செய்தார்.

## ரூபா 1,15,000 கொடுக்கவேண்டும்

கோட்டை, வியாழன்

பரீட்சை இலாகா அரசாங்க என்ஜினியரிங் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு லட்சத்துப் பதினையாயிரம் ரூபா கொடுக்கவேண்டியுள்ளது

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு வழங்கப்பட்ட கம்பியூட்டர் சேவைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 400 ரூபா வீதம் 2 லட்சம் ரூபா 'பில்' போடப்பட்டுள்ளது. ஆனல் 85,000 ரூபா மட்டுமேகொடுக்கப்பட்டுள்ளது மிகுதிப் பணமாக ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா கொடுக் கப்படாமலுள்ளது.

அரசினர் மதிப்புத்திட்டத்தைவிட பெரிதாகவே கட்டப்பட்டுள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் புதிய கட்டிடத்திறப்புவிழா நடைபெறும்.

......

## தடை!

அம்பன், வியாழன்

வடமராட்சி கிழக்கில் கற்கோவளம் தொடககம் சுண்டிக்குளம் வரையும் கடற்கரையோரங்களில்வேட்டையாடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கள்ளக்கடத்தலையும் கள்ளக்குடியேற்றத்தையும்தடுக்கும்முகமா இப்பகுதிக் கடற்கரையோரங்களில் ரோந்து புரியும் இராணுவத்தினருக்கு வேட்டையாடச் செல்பவர்களால் தொந்தரவுகள் ஏற்படுவதன் காரணமாகவே இத்தடை விதிக்கப்பட்டிருக்கின்றதென அறியப்படுகிறது.





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள், தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா படைகளை எல்லைக்கப்பால் துரத்திவிட்டார்களாம்

## ஜோர்டானியர் அறிவிப்பு

## அம்மான் நகரெங்கும் அவலக்குரல்கள்

அம்மான், செப்.24

**ஜோர்டானுக்குள் புகுந்து தாக்குதல்களில் இறங்கிய சிரியா படைகளைத் துரத்தியடித்து விட்டதாக ஜோர்டான் படைகள் அறிவித்துள்ளன. ஆனால் இதனை அரபுக் கொமாண்டோக்கள் மறுத்துள்ளனர்.**

ஜோர்டானில் வட பிராந்தியத்தில் இர்பிட் பகுதியில் சிரியா படைகள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாக முன்பு ஜோர்டானியர் அறிவித்திருந்தனர். ஆனால் இதை சிரியா அரசாங்கம் தொடர்ந்து மறுத்து வந்தது. இப்பகுதியில் சிரியா எல்லையிலிருந்து புகுந்தவர்கள் கொமாண்டோ இயக்கத்தவர்கள் தாம் என்றும், சிரியா படையினர் அல்லவென்றும் கொரில்லாக்கள் அறிவித்தனர். கொரில்லா போர்வையில் சிரியா படைகள் உட்புகுந்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இப்பொழுது இந்தப் படைகளை சிரியா எல்லைக்குள் தள்ளிப் போகச் செய்து விட்டதாக ஜோர்டான் படைகள் அறிவித்தன. என்றாலும் இப்பிரதேசம் கடுமையான தாக்குதலுக்குள்ளான போதிலும் தொடர்ந்து தம் வசமே இருப்பதாக கொமாண்டோக்கள் தெரிவித்துள்ளனர்.

### அரபாத் கண்டனம்

ஜோர்டான் மன்னர் கொரில்லாக்களுடன் கடைசியாகச் செய்துகொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை அல்பத்தாஹ் தலைவர் யாசிர் அரபாத்தும் சிரியா அதிபர் அத்தாஸியும் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள், இந்த ஒப்பந்தம் தமக்குக்கீழுள்ள அபுஇஸாதுவிடம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஜோர்டானில் கைதாக விருந்த போது இவர்களுடன் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாகவும் அரபாத் தெரிவித்துள்ளார்.

ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றி எகிப்திய அதிபர் நாஸருக்கும் அரபாத் தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார். அபு இஸாதும் அவரது மூன்று சகாக்களும் இப்பொழுது கெய்ரோவில் அதிபர் நாஸரை சந்திப்பதற்காகப் போயிருக்கிறார்கள். சூடான் அதிபர் நுமேரி ஜோர்டான் மன்னர் ஹுசேனுடன் ஆலோசனைகள் நடத்தியபின்னர் இப்பொழுது கெய்ரோ திரும்பியிருப்பதாகத் தெரிகின்றது.

அம்மானிலிருந்து சுமார் 100 பத்திரிகையாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது வரை சுமார் 5000 கொரில்லாக்கள் அரசாங்கப் படைகளிடம் சரணடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சோவியத் எச்சரிக்கை

மேற்காஸிய நெருக்கடியில் அமெரிக்கா தலையிட முயல்வதாக வெளி வந்து கொண்டிருக்கும் செய்திகள் பற்றி சோவியத் யூனியன் கடுமையான எச்சரிக்கையொன்றை விடுத்திருக்கின்றது ஜோர்டான் நெருக்கடியின் தலையீடு நிலைமை மேலும் சிக்கலாகிவிடும் என்று டாஸ் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது

இதற்கிடையில் அம்மானிலிருந்து கிடைக்கும் செய்திகள் மிகப் பயங்கரமாகவும் மனதை உருக்குபவையாகவுமிருக்கின்றன. தெருக்கள் எங்கும் பிணங்கள் சிதறிக் கிடப்பதாகவும், காயமடைந்தவர்களின் ஓலங்கள் கேட்டுக்கொண்டேயிருப்பதாகவும், மருந்து வழங்க வசதியில்லாததால் காயமடைந்தவர்களில் ஏராளமானவர்கள் உயிர் துறந்துள்ளதாகவும் அச் செய்திகள் கூறுகின்றன. கொமாண்டோக்களால் பணயமாகப் பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பத்திரமாக இருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

— —

### வட்டார வித்தியாதரிசி பதவிகளுக்குப் பண்டிதர்?

### 'நாவலர் போராடியிருப்பார்'

சண்டிலிப்பாய், வியா

'நாவலர்இன்று உயிரோடு இருப்பாரானால் தமிழுக்கும் சைவர்களுககும் ஏற்படும் ஆபத்துக்களை எதிர்த்துப் போராட முன்வந்திருப்பார்' என்று சண்டிலிப்பாய் இந்துவாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசிய சங்கத் தலைவர் திரு ச. கா. சபாநாதன் தமது தலைமையுரையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் அன்னியர் ஆதிக்கத்தின் போது கிறீஸ்தவ மதத்தினால் சைவத்திற்கு ஆபத்து ஏற்பட்ட வேளையில் நாவலர் தோன்றி சைவத்தைப்பாதுகாத்தார். மேலும் அவருடைய பணியை பின்பற்ற வேண்டுமாயின் வாலிபர்களாகிய உங்களால்தான் முடியும். அதற்காக இடைவிடாது எமது கிராமத்தில் சைவமகாநாடுகளையும் நாயன்மார்குரு பூசைகளையும் நடத்தி அவற்றின் மூலம் சமயத் தொண்டுகளைச் செய்யமுடியும் என்று சொன்னார்.

— —

### பதிவுத்தபாலை தமிழில் ஏற்க மறுப்பு?

யாழ்ப்பாணம், வெள்ளி

'பதிவுத்தபாலில் அனுப்புவதற்காக வெள்ளவத்தை தபால் நிலையத்தில் என்னால் ஒப்படைக்கப்பட்ட கடிதத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு தபால் நிலைய அதிபர் மறுத்துவிட்டார். அரசாங்க சேவையில் அனுப்பப்படவிருந்த அக்கடித உறையில் எனது பெயரும், பதவியும் தமிழில் பொறிக்கப்பட்டிருந்[illegible]னால் அதை ஏற்றுக்கொ[illegible] முடியாதென அவர் கூறிவிட்டார்.

தமிழில் வரும் கடிதங்களை ஏற்றுக் [illegible] தென உங்கள் அமைச்சின் கீழுள்ள அதிகாரிகளுக்கு

### தலைவர் பதவியில் நீடிக்க நிஜலிங்கப்பா விரும்பவில்லை

பெங்களூர், செப். 24

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் பழைய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு தான் போட்டியிடப் போவதில்லை என பழைய காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா தெரிவித்தார் 68 வயதுடைய திரு. நிஜலிங்கப்பா நகரகாங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசுகையில் பிரதம மந்திரி சோவியத் ருஷ்யாவின் உதவியுடன் சர்வாதிகாரியாக நடந்து வருகிறார் தனக்குப் பிடிக்காத ராஜ்ய அரசுகளைக் கவிழ்ப்பதிலேயே இன்னமும் கவனம் செலுத்தி வருகின்றார் ஜனநாயக சக்திகள் ஒன்றுதிரண்டு இவ்வித சர்வாதிகாரத்தை எதிர்க்கவேண்டும்.

நான்எப்பொழுதோ அரசியலில் இருந்து விலகிஇருக்க வேண்டும். ஆனால் பிரதமர் இந்திராவின் நடவடிக்கைகளே அரசியலில்நான்தொடர்ந்துநீடித்ததற்குக்காரணம் முதுமையானவர்கள் விலகி இளைஞர்களுக்கு இடம் அளிக்க வேண்டும் கேரளாவில் கிடைத்ததோல்வியைக் கண்டு இளைஞர்கள் அதைரியப்படத் தேவையில்லை கட்சி ஊழியர்கள் இதை ஒருபடிப்பினையாகக் கொண்டு 1972 தேர்தலுக்குத் தங்களைத்தயார் செய்து கொள்ள வேண்டும் மைசூர் மாநிலத்திற்கு மீண்டும் முதலமைச்சராகும் எண்ணம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

— —

### அதிசய வாழை

புதுடில்லி, செப். 24

ஆந்திராவைச் சேர்ந்த தோட்டத் தொழில்நிபுணர் பத்துவருட ஆராய்ச்சியின் பயனாய் 'பாஸ்கரகேலா' எனச்சொல்லப்படும் புதுவித வாழையை உற்பத்தி செய்துள்ளார். 14 அங்குல நீளமும் 2 1/2 அங்குல பருமனுமுடைய வாழைப்பழங்கள் பொன்னிறமாக ஜொலிக்கின்றன இவ்வாழைப்பழங்கள் பிரிட்டனுக்கும் மற்றும் ஆறு ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பபடுகிறது.

ஆண்டுக்கு 3 கோடி வாழைப்பழங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன இதில் 5 ஆயிரம் டன் வாழைப்பழங்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

— —

### வழிப்பறி

புத்தளம், வியா

யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளம் நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த முதலாளி ஒருவரிடமிருந்து 1000 ரூபா பணம் பறிக்கப்பட்டுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

லொறிக்கு முன்னால் கருங்கற்களைப் போட்டு வழிப்பறி செய்தது பற்றிப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# வருடம் ரூ. 40 லட்சம்!

## விசா வரிமூலம் கிடைக்கும்

கோட்டை, புதன்

விசாவரிமூலம் வருடாந்தம் 40 லட்சம் ரூபா அரசாங்கத்துக்கு வருமானமாகக் கிடைக்க இருக்கிறது. மூன்று மாதத்துக்கு மேல் தங்கிச் செலலும் உல்லாசப் பிரயாணிகளும் விசாவரியாக 500 ரூபா செலுத்த இருப்பதால் இப் புதிய சட்டத்தின்படி வருடத்தில் அரசாங்கம் அதிக வருமானத்தைப் பெறும் இத்தகவலை நிதி அமைச்சர் திரு என். எம் பெரேரா தெரிவித்தார்.

விசாவரி முதன் முதலில் 1961-ல் ஏற்படுத்தப்பட்டது. அப்போது விசாவரி 400 ரூபாவாக இருந்தது. இப்போது புதிய சட்டத்தின்படி 100 ரூபா கூட்டி 500 ரூபாவாக்கப்பட்டுள்ளது.

### தமிழகசஞ்சிகைகள் கட்டுப்பாடு

## 'மக்களுக்குத்தெளிவானகருத்து ஏற்படச் செய்யவேண்டும்'

வெள்ளவத்தை, வியா

''தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் தரமற்ற சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்த ஆதரவு தெரிவிக்கும் [illegible] சமயத்தில் எங்க[illegible] [illegible]யில் 'பலமான' சஞ்சிகை ஒன்று இருக்கிறதா என்பதுதான் முதற்கேள்வி. இன்று ஈழத்தில் தரமான இலக்கியப் பத்திரிகைகளை நடாத்துபவர்கள் பெரும்பணம் படைத்தமுதலாளிகளல்ல. இலட்சிய வீறுகொண்ட எழுத்தாளர்களேயாவர் கல்கி, ஆனந்தவிகடன் என்பன பெரிய பெரிய ஸ்தாபனங்களிலிருந்து வரும் பத்திரிகைகள். அவற்றோடு தாக்குப்பிடிக்கக் கூடிய அளவிற்கு எமது நாட்டிலும் பத்திரிகைகளை உருவாக்கவேண்டும். அப்படியான பலம் வாய்ந்த பத்திரிகைகளை எப்படி உருவாக்கலாம் என்பதுதான் பிரச்னை இலங்கை மத்திய வங்கியிடம் பத்திரிகைகளை இறக்குமதி செய்யும் பணியை அரசாங்கம் ஒப்படைக்க விருப்பது நல்ல காரியமாகும்'',

இவ்வாறு ஈழத்து எழுத்தாளர் திரு. மு. கனகராசன் கொழும்புக்கிளை இலக்கிய நண்பர் கழகம் நடாத்திய மாதக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

வெள்ளவத்தை திரு. நெல்லை க. பேரன் தலைமை வகித்தார்.

குப்பிழான் திரு. ஐ. சண்முகன் பேசுகையில் 'தமிழகத்தின் தரமற்ற சஞ்சிகைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கேள்வி ஏன் எப்படி உருவானது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஈழத்தின் தனித்துவத்தையும் எமது சொந்த நாட்டின் கலை, கலாச்சாரங்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கோடு பல வருடங்களாகப் பாடுபட்டு வந்த தேசிய உணர்ச்சி கொண்ட எழுத்தாளர்களால்தான் இந்தப் பிரச்னை உருவாக்கப்பட்டது. உதாரணமாக இன்று 'மல்லிகை' என்ற மாத சஞ்சிகையை நடாத்தி வரும் ஜீவாவைச் சொல்லலாம். அன்று அவரைப்போன்றவர்கள் ஆரம்பித்த சிறுபொறி இன்று நெருப்பாகப் பரவி நாட்டு மக்கள் அனைவர் மத்தியிலும் முக்கிய பிரச்னையாகக் கிளப்பப்பட்டுள்ளது'' என்றார்.

நெல்லைக் க. பேரன் பேசுகையில் 'சஞ்சிகைகள் இறக்குமதித் தடை' என்ற கோஷம் இங்கு கிளப்பப்பட்டபின்னர்தான் ஈழத்திலும் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். எங்கள் நாட்டிலும் இலக்கியம் பிறக்கிறது என்ற ஓர் உணர்வு சாதாரண மக்களிடையே எழுந்துள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த விஷயத்தில் பொது மக்கள் மத்தியில் தெளிவான கருத்துக்களை உருவாக்குவதில் சகல இலக்கியகாரர்களும், மன்றங்களும், பத்திரி

# கேரள மந்திரிசபை அமைப்பில் இன்னமும் நிலைமை தெளிவில்லை

திருவனந்தபுரம், செப்.24

கேரள மாநிலத்தில் மந்திரிசபை அமைப்பதுபற்றிய விடயத்தை முடிவு செய்வதை புதிய காங்கிரஸ் கட்சியின் மத்திய பார்லிமெண்டரி போர்ட் ஒத்திவைத்துள்ளது. ராஜ்ய சட்டசபை [illegible]

யாக ஒத்துழைக்கவேண்டி இருக்குமெனவும், இதைவத்து[illegible] தலைவர்கள் ஏற்றுக்[illegible]ள்ளாத பட்சத்தில் முன்னாள் முதலமைச்சர் அச்சுத மேனன் கலப்பு அமைச்சுக்கு தலைமை வகிக்கவேண்டுமெனவும், கேரள புதிய [illegible]

டையே இரண்டுபட்ட கருத்து நிலவவிருவதாக திருவனந்தபுரச் செய்திகள் கூறுகின்றன. ஆனால், கட்சி மந்திரிசபை அமைப்பது பற்றி எவ்வித முடிவுசெய்தாலும், கட்சியின்ஒற்றுமைகுலையாது என கேரள புதிய காங்கிரஸ் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குதலுக்குள்ளான போது முது செய்ரோ திரும்பிவிரு

# வட்டார வித்தியாதரிசி பதவிகளுக்குப் பண்டிதர்?

பருத்தித்துறை, வியா

''கடந்த அரசாங்கம் தமிழ்ப்பண்டிதரை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குச் சமமானவர்களென அங்கீகரித்துள்ளதுடன் அதிபர்கள் முப்பிரிவுப் பகுதிகளுக்கும், விசேட பதவி முப்பிரிவுகளுக்கும் தகுதியுடையவர்களெனக் கணித்துள்ளது. எனவே இப்பதவிகளிலும் குறைந்த சம்பளத்தைக் கொண்ட வட்டாரக் கல்வி அதிகாரிகள் பதவிகளுக்கும் தமிழ்ப் பண்டிதரை நியமிப்பது பொருத்தமானதாகும்''

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்ப் பண்டிதர் சங்கச் செயலாளர் கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மகமூத்திற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

வட்டார கல்வியதிகாரிகளின் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை இ-பொழுது நடந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டுக்கூத்துக்களை மேடையேற்ற வேண்டும்

பருத்தித்துறை, வியா

''கிராம மக்களின் விருப்பு வெறுப்புகளையும், உயிர்த்துடிப்புகளையும், அபிலாஷைகளையும் பிரதிபலிப்பன நாட்டுக்கூத்துகளே. அர்த்த புஷ்டியான கருத்துக்களையும் விவசாயிகளின் சூழலுக்கே உரித்தான இசையையும் நாட்டுக் கூத்துகள் தம்முள் அடக்கியுள்ளன. மண்டிக் கிடக்கும் இவ்வித நாட்டுக்கூத்துகள் பழமையென்று ஒதுக்கி வைக்கப்படாது. மீண்டும் மேடையேற்றப்படல் வேண்டும்.''

இவ்வாறு வாணிக் கலைக் கழகப் பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திரு. பொன். கணேசன் கூறினார். பண்டிதர் திரு. க. வீரகத்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தைப்பொங்கலன்று பருத்தித்துறை கட்டற்கரை மைதானத்தில் உள்ளூர்க் கலைஞர்களால் நடிக்கப் பெறும் ஒருசில நாட்டுக் கூத்துகள் மேடையேற்றப் படவிருப்பதாகவும் கூட்ட இறுதியில் முடிவு செய்யப் பட்டது.

# கிளிநொச்சியில் 30-ம் திகதி வானொலி விவசாய விழா

## இரு அமைச்சர்கள் கலந்து கொள்வர்

யாழ்ப்பாணம், வெள்ளி

வானொலி விவசாயவிழா இம்மாதம் 30-ந் திகதி கிளிநொச்சி றெட்றிபோ மைதானத்தில் நடைபெறவிருக்கிறது,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், கமத்தொழில் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இவ்விழாவில் தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. இரத்திநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர். போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு திருமதி செ. குமாரசூரியர் பரிசில்களை வழங்குவார்.

மாலை 5-30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மேலதிக அத்தியட்சகர் திரு. க. செ. நடராசாவின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமாகும். வளர்ந்த விவசாயிகளின் இறுதிப்போட்டியும், விழா பார்வையாளரிடையே விவசாய அறிவுப்போட்டியும் இடம்பெறும்.

### கதம்பநிகழ்ச்சிகள்

செல்வி லீலா நாராயணனின் குச்சுப்பிடி நடனமும், திருமதி ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி மாணவிகளின் மெல்லிசையும், யாழ்ப்பாணம் சதங்கை நர்த்தனாலய மாணவிகளின் மயில் நடனமும், கண்ணன் கோஷ்டியினரின் மெல்லிசை விருந்தும், அரஸ்கோ சகோதரிகளின் குறத்தி நடனமும் விழாவில் இடம் பெறும்.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை வடபகுதி விவசாய அதிபர் திரு. பி. மாணிக்கவாசகர் செய்து வருகிறார்.

போக்களால் பணயமாகப் பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்கள் பத்திரமாக இருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

—

# பீப்பாய்க்குள் மனித சடலம்

இரத்தினபுரி, வியா

கங்கை ஒன்றில் மிதந்து வந்த பீப்பாய் ஒன்றுக்குள் இருந்த மனித சடலம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

களுகங்கையில் மிதந்து வந்த இந்தப் பீப்பாய்க்குள் ஒருவித திரவம் இருந்தது அதனுள் சிதைக்கப்பட்ட மனிதசடலம் இருந்தது பற்றி உடனடியாக பொலிசுக்குத்தகவல் கொடுக்கப் பட்டது.

விசாரணை நடாத்திய பொலிசார் அச்சடலம் அங்குறுவாத்தோட்டை வாசியான குமாரநாயக்கா பேபிசிங்கோ என்பவரினது என்று அடையாளம் கண்டுள்ளனர். இது கொலையாக இருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

கப்பட்டிருப்பதில் அதை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் கூறிவிட்டார்.

தமிழில் வரும் கடிதங்களை ஏற்றுக் கொள்ளக்கூடாதென உங்கள் அமைச்சின் கீழுள்ள அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவு பிறப்பித்துள்ளீர்களா? அப்படி இல்லையாயின் இதுபற்றி நடவடிக்கை எடுப்பீர்களா?'

இவ்வாறு குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்றை தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தபால் தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியருக்கு அனுப்பி வைத்துள்ளதாக திரு. இரத்தினம் தெரிவித்தார்.

......

# ஆண்டு விழா

நாவடி, வியா.

நுண்கலைக் கல்லூரியின் 10-வது ஆண்டுவிழா முன்னை யாழ். மாநகரசபை முதல்வர் திரு. சி. நாகராசா தலைமையில் ஆனைப்பந்தி உயர்கலை மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

திருநெல்வேலி நந்தி இசை மன்றத்தின் மிருதங்க இசை மற்றும் வயலின், பாட்டு, நடனம் என்பன விழாவில் இடம் பெற்றன.

கேரள மாநிலத்தில் மந்திரிசபை அமைப்பதுபற்றிய விடயத்தை முடிவு செய்வதை புதிய காங்கிரஸ் கட்சியின் மத்திய பார்லிமெண்ட் போட் ஒத்திவைத்துள்ளது. ராஜ்ய சட்டசபையின் புதிய காங்கிரஸ் கட்சிக் கிளையின் விருப்பத்தை தெரிந்து கொள்வதற்கே இந்நடவடிக்கை என அறிவிக்கப் பட்டது.

இதற்கிடையில், கேரள வலது கம்யூனிஸ்ட் காரியதரிசி திரு. என். கோவிந்தன் நாயர், இந்திரா காந்தியைச் சந்தித்து இதுவிஷயமாக பேச்சுவார்த்தை நடத்தினார் என டில்லியில் இருந்து கூறுகின்றன.

கேரளாவில் அமைக்கக் கூடிய புதிய மந்திரிசபையில் புதிய காங்கிரஸ் கட்சியைச் சேர்த்துக்கொள்வதை புரட்சி சோஷலிஸ்ட் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகள் எதிர்ப்பதாக அறியப் படுகிறது.

37 உறுப்பினர்களை உடைய குட்டி அணியுடன் புதிய காங்கிரஸ் சேர்ந்து மந்திரிசபை அமைக்க வேண்டுமென கேரளத் தலைவர்கள் விரும்புகின்றார்களாம். இப்படிச் செய்யும் பட்சத்தில் முஸ்லிம் லீக்குடன் நேரடி

இருக்குமெனவும், இதைவிட அத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் முன்னாள் முதலமைச்சர் அச்சுதமேனன் கலப்பு அமைச்சுக்கு தலைமை வகிக்கவேண்டுமெனவும், கேரள புதிய காங்கிரஸ் தலைவர்கள் விருப்பமதெரிவித்தனராம். ஆனால் மந்திரிசபையில் சேராமல், குட்டி அணியை ஆதரிப்பதை அவர்கள் விரும்பவில்லை. எல்லாவிதமான முற்போக்கு நடவடிக்கைகளுக்கும் புதிய காங்கிரஸ் உதவிசெய்தாலும் அப்பெருமை குட்டி அணிக்குப் போய்விடும் என்பதே இதற்குக் காரணமாம்.

கேரள புதிய காங்கிரஸ் தலைவர்கள், கே. கே. விஸ்வநாதன், கே. கருணாகரன், ஹென்றி ஆஸ்டின் ஆகியோர் பிரதம மந்திரி இந்திரா காந்தி, புதிய காங்கிரஸ் தலைவர் ஜகஜீவன்ராம், தார்பார்சிங், பஹுகுணா ஆகியோருடன் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தினர். கேரளாவில் ஜனநாயக சோஷலிச மந்திரிசபை அமைவதற்கு புதிய காங்கிரஸ் உதவுமென பகுணா கருத்துத்தெரிவித்தார்.

கேரளாவில் புதிய மந்திரிசபை அமைப்பதில் புதிய காங்கிரஸ் அங்கத்தவர்களி

த்து நிலவவிருவதாக திருவனந்தபுரச் செய்திகள் கூறுகின்றன. ஆனால், கட்சி மந்திரிசபை அமைப்பது பற்றி எவ்வித முடிவுசெய்தாலும், கட்சியின் ஒற்றுமைகுலையாது என கேரள புதிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு, கே. கே. விஸ்வநாதன் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் தலைவர் அச்சுதமேனன் தலைமையில் புதுக்கூட்டரசாங்கம் அமையும் என கேரள முஸலிம் லீக் தலைவர் பவகிதங்கல் நம்பிக்கை தெரிவித்தார். புதிய காங்கிரஸ் தலைமையில் கலப்பு மந்திரிசபை அமைப்பதை முஸ்லிம்லீக் விரும்பவில்லை எனத்தெரிகிறது. ஆனால் அதே நேரத்தில் கேரளப்போட்டிக் காங்கிரஸை புதிய மந்திரிசபையில் சேர்ப்பதற்கு முஸ்லீம் லீக் ஆவலாய் இருக்கிறதென அரசியல்வட்டாரங்கள் தெரிவித்தன.

சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற 5 பழைய காங்கிரஸ் உறுப்பினர்கள் நிலை இன்னும் தெளிவாகவில்லை. இந்திய பிரஜா சோஷலிஸ்ட்கட்சி, எதிர்க்கட்சியில் தனித்தியங்குவதாக முடிவுசெய்துள்ளது.

எழுந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த விஷயத்தில் பொதுமக்கள் மத்தியில் தெளிவான கருத்துக்களை உருவாக்குவதில் சகல இலக்கியகாரர்களும், மன்றங்களும், பத்திரிகைகளும் உதவி செய்ய வேண்டும்' என்றார்.

திருவாளர்கள் ஐ. சாந்தன், அண்ணா இராசேந்திரம், அ. யோகராசா, கே. ஸ்ரீதரசர்மா, எஸ். வன்னியகுலம் ஆகியோருட்படப் பலர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

— —

# உல்லாச பிரயாண தொழில் விஸ்தரிப்பு

கோட்டை, வியா

கப்பல் தொழில் உல்லாசப் பிரயாணத் தொழில் அமைச்சர் திரு. பி. ஜி. பி. கலுகல்லே, இலங்கையின் உல்லாசப் பிரயாணத் தொழிலை, வருவாய் பெருமளவில் தரத்தக்க தொழிலாக விஸ்தரிக்கவுள்ளார்.

நேற்று முன் தினம் இலங்கை வர்த்தக மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்படி தனது தீர்மானத்தைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''நாட்டில் உல்லாசப் பிரயாணத் தொழிலை ஊக்குவிப்பதற்கு எந்தவித உதவி வேண்டுமானாலும் நான் செய்யத் தயாராயிருக்கிறேன். கிராமப்பகுதிகளில் உல்லாசப் பிரயாணத் தொழிலை முன்னேற்றுவதில் உள்ளூராட்சி மன்றங்கள் மிகுந்த அக்கறை காட்டவேண்டும். நாட்டுக்கு எவ்வளவுக்கெவ்வளவு உல்லாசப் பிரயாணிகள் வந்து சேருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.''

......

# மேலும் ஒரு கட்டிடம்

இமையாணன், வியா

வடமராட்சி கூட்டுறவு வைத்தியசாலைச்சங்கத்திற்கு வல்லையில் மேலும் ஒரு கட்டிடம் ஒன்றேகால் லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கிறது.

மேற்படிசங்கத்தின் வருடாந்த கூட்டம் கடந்த வாரம் நடைபெற்ற போது இது தீர்மானிக்கப்பட்டது

இது தவிர மருந்து தளபாடம் சம்பளம் முதலிய வற்றுக்கு அடுத்த வருடத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஜீவர்களை மனம் நோகப் பேசாமலிருத்தலும், பேரன்போடு கூடிய உண்மை மொழிகளைக் கூறுதலும் வேதாகமங்களை ஓதுதலும் வாக்கினால் செய்யத் தகுந்த தவமாகும். — பகவத்கீதை.

ஈழநாடு
Eelanadu N.tional Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 9-ந் திகதி (25-9-70)

## தமிழுக்குச் சமசந்தர்ப்பம்

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கஇருப்பதாக உதவி தொழில் அமைச்சர் திரு எச் எஸ். சிறிசேன, அம்பனையில் நடைபெற்ற ஒரு வரவேற்புக்கூட்டத்தில் நல்லதோர் செய்தியை அறிவித்தார். சோஷலிஸ நாடுகளில் மூன்று மொழிகளைப் படித்தாலும் உள் நிர்வாகத்திலும் கல்வியிலும் சுயமொழிதான் கையாளப்படுகிறதென்றும் அதேபோல் இங்கும் தமிழும் சிங்களமும் உள் நிர்வாகத்திலும் கல்வியிலும் முக்கிய இடம்பெற வேண்டுமென்றும் அவர் பகிரங்கமாகக் கூறியது, தமிழருக்குக் கூறிய வெறும் ஆசை வார்த்தைகளாக இருக்கமுடியாது.

ஏனெனில் இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்தபோது, சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோதும், இவ்விரு மொழிக் கொள்கையையே கட்சியின் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தார்கள். பல வருடகாலம் இருமொழிகளும் அரசாங்க மொழிகளாக அமுலில் இருந்தும் வந்தன. ஆனால் 1956-ம் வருடத்தில் தேர்தல் காரணமாக இக் கொள்கையை மாற்றினர். தமிழைக் கைவிட்டு சிங்களம் மட்டும் என்ற கோஷத்தை எழுப்பினர். பீரங்கி முனையில், இடதுசாரிக் கட்சிகளும் பலமாக எதிர்க்க தனிச்சிங்களச் சட்டம் நிறைவேறியது. நாட்டில் வகுப்பு வெறி கிளம்பியது. அமைதி குலைந்தது நாட்டு முன்னேற்றம் தடைப்பட்டது பிரதமர் பண்டாரநாயகாவும் கொலை செய்யப்பட்டார். ஸ்திரமான அரசாங்கம் ஏற்பட முடியாமற் போயிற்று. இந்த அவலநிலைக்குக் காரணம், தமிழ்மொழிக்குச் செய்த ஊகிப்பது அதிகதவறாகாது.

இல்லாவிட்டால் சட்டப் படிப்பை ஏன் தமிழிலும் அளிக்க ஒழுங்குசெய்ய வேண்டும்? சிங்களத்தில் தேர்ச்சிபெறவில்லை என்ற காரணத்தால் வேலையிழந்தவர்கள் விஷயத்தை அனுதாபத்துடன் கவனித்து, அவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பமளிக்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதை அரசாங்கம் செய்யுமாயின், தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற அது உதவக்கூடும். வெறும் வார்த்தைகளாலும் உறுதிமொழிகளாலும் பயனில்லை. காரியத்தில் காட்டினாலே நம்பிக்கை பிறக்கமுடியும்.

சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழரசுக்கட்சி ஏற்கெனவே ஒப்புக்கொண்டுவிட்டதாகவும் அந்த உறுதிமொழியிலிருந்து அக் கட்சியினர் இப்போது பிறழுவதாகவும் வண டாக்டர் ரத்னசாரா என்பவர் பத்திரிகை மூலம் விடுத்த பதிலில் குற்றம்சாட்டுகின்றார். தமிழரசுக்கட்சித் தலைவர் இதற்குச் சரியான பதில் அளிக்கக்கூடும். தமிழ்ப் பொதுமக்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் தனிச் சிங்களச் சட்டத்தை ஒருபோதும் ஒப்புக்கொண்டதில்லை. தங்கள் உயிரினும் மேலான மொழி உரிமையை அவர்கள் இழக்க சம்மதித்ததில்லை. தங்கள் மொழிக்கு இருந்துவந்த சமஉரிமையை இழந்தபோது அவர்கள் இனி இந்நாட்டில் தன்மானத்துடன் சரிசமமாகத் தலைதூக்கி நிமிர்ந்து வாழமுடியாதென்று உணர்ந்து தங்கள் தன்மானத்துக்காகப் போராடினர். போராடி வருகின்றனர். தங்கள் மொழி உரிமையை இழக்க அவர்களோ அவர்களது தலைவர்களோ எச்சமயமும் சம்மதிக்கவில்லை. உண்மை என்னவெனில்

# ஜோர்தான்: மேற்காஸியாவில் மற்றொரு வியட்னும் சண்டை?

நான்கு பெரிய விமானங்களை திசைதிருப்பி, வெடிவைத்துத்தகர்த்து உலகத்தையே கிடுகிடுக்கவைத்த பலஸ்தீன் விடுதலை முன்னணி என்ற கமாண்டோ படையின் உயிர்நாடி ஜார்ஜ் ஹப்பாஸ் என்பவர். அவரைப் பிடித்துத் தருபவருக்கு 5000 'டினார்' (அதாவது 5900 பவுண்) இனும் அளிக்கப்படுமென்று (ஜோர்டானின் அம்மான்ரேடியோ அறிவிக்கின்றது.

ஜார்ஜ் ஹப்பாஷ் என்பவர் ஒரு கிறிஸ்தவர் டாக்டர் வயது 44 ஓர் அராபிய தானிய வியாபாரியின் புதல்வர், லெபனானிலுள்ள பெய்ரூட் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் வைத்தியக்கல்வி பயின்றவர். 1948-ம் வருடத்தில் நடந்த அரபு-இஸ்ரேல் சண்டையில் விட்டஎனுமிடத்திலிருந்த அவரது குடும்பத்தார் தங்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டு உயிர்காப்பாற்றிக் கொள்ள தப்பி ஓடினர். இளம் ஹப்பாஷ் பெய்ரூட்டுக்குத் திரும்பி ''பழிவாங்கும் வாலிபர்'' என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்.

இருவருடங்களுக்கு முன்பாக அவரது பலஸ்தீன் விடுதலை முன்னணி ஓர் இஸ்ரேலிய 'எல்ஆல்' விமானத்தை அல்ஜீரியாவுக்கு திசைதிருப்பிச்சென்று, ''ஆகாயக் கொள்ளை'' இயக்கத்துக்கு வித்திட்டது. சென்ற வருடத்தில் அதே முன்னணி சாவூதி அரபிய எண்ணெய் குழாய்களை தகர்த்தது அவர்களது பயங்கரப் புரட்சிக்காரியங்களை அரபுத்தலைவர்களிற் பலர் கண்டித்தாலும் அராபிய பொதுமக்கள் இதுபற்றி ஒருபுதுப்பெருமை அடைகின்றனர். அராபிய இராணுவத்தாலும் அல்பேடா இயக்கத்தாலும் செய்யமுடியாத காரியத்தை இவர்கள் சாதித்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். இதனால் அந்த இயக்கத்தின் செல்வாக்கும் பலமும் அரபுகளிடையே அதிகரித்து வருகின்றன.

என்றாலும் இந்த இயக்கத்துக்குப்பல எதிர்ப்புகளும் தடைகளுமுள்ளனவாம். இவர்கள் தீவிரமார்க்சிய வழியைப் பின்பற்றுவதால், சில அராபிய அரசாங்கங்களின் உதவியைப்பெறுவதில்லை. ஜார்ஜ் ஹப்பாஷ் ஒரு கிறிஸ்தவராதலால், ஓர் உயர்தர அரபுத்தலைவராக அவரை சிலவட்டாரங்கள் அவ்வளவு மதிப்பதில்லை என்றும் சொல்லப்படுகின்

### ஐயாறன் எழுதுவது

றது. என்றாலும் அவர் மேற்கு ஆசியாப்போரில் ஒரு பெரிய புள்ளி என்பதை மறுப்பதற்கில்லை. உயிரைத் துரும்பாக மதித்து துணிச்சலுடன் காரியம் செய்யும் அவர், வியட்னும் சண்டை போலவே ஒன்றை நாங்கள் விரும்புகிறோம் அம்மான் எங்கள் ஹனாய் சண்டை இப்போதுதான் ஆரம்பித்துள்ளது. இனித்தான் மிகத் தீவிரமான காரியங்கள் நடக்கப்போகின்றன. என்று சமீபத்தில் கூறினார்.

அவர்இப்போதுவடகொரியாவில் ஏதோரகசிய அலுவலாகச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

0 0 0

அம்மானில் நடந்துள்ள ஐந்துநாள் சண்டையிலே 8000 கமாண்டோக்கள் கொல்லப்பட்டதாயும் பல்லாயிரக்கணக்கானவருக்குக் காயமென்றும் டமாஸ்கஸில் (ஸிரியா) உள்ள பலஸ்தீன் விடுதலை இயக்க வானொலி தெரிவிக்கின்றது" ''ஹப்பாஷ் வெளிநாட்டுக்குச் சென்றிருப்பதும், நான்கு விமானங்களை வெடி வைத்துத் தகர்த்திருப்பது சிறிய விஷயமல்ல. ஜோர்டானை நாசமாக்கி அதன் மக்களை அடிமையாக்கும் சதிச் செயலே'' என்று அம்மான் வானொலி கூறுகின்றது. அம்மானில் பூரண ஊரடங்குச்சட்டம் போட்டிருப்பதையும், அங்கு மீண்டும் சண்டைஆரம்பித்திருப்பதையும் பார்க்கும்போது நிலைமை எவ்வளவு மோசமாகிவருகிறதென்பதை ஊகிக்கலாம்.

கமாண்டோக்களை ஆதரித்து அரபுநாடுகளான ஸிரியாவும். ஈராக்கும்இராணுவ உதவி அளித்து வருவதாகக் கூறப்படுகிறது. வேறுசில அரபு நாடுகள் ஜோர்டானுக்கு பணஉதவி அளிப்பதை நிறுத்தியுள்ளன. அரபுகளுக்குள்ளாக நடக்கும் இந்த ''தற்கொலை'' சண்டையை உடனடியாக நிறுத்த கெய்ரோவில் அராபிய உச்சிமகாநாடு கூடியுள்ளது" கொரில்லாக்களுக்கு எதிராகத்தாம் நடத்தும் இந்தச்சண்டையில் தமக்கு ஆதரவளிக்கும்படி மன்னர் ஹூசேன் நான்கு பெரிய வல்லரசுகளைக் கேட்டுக்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இராணுவத்தலையீடு இல்லாமலேயே, அரசியல்பேச்சுகள் மூலம்ஜோர்டான் பிரச்னையைத்தீர்க்க முயற்சிகள் ஒருபக்கம் நடந்து கொண்டிருக்கையில், அமெரிக்கா, ஐரோப்பா, மத்தியதரைக்கடல் முதலிய இடங்களிலுள்ள அமெரிக்க துருப்புகள் மேற்கு ஆசியாவுக்கு எந்தச் சமயமும் புறப்படத்தயாராகவுள்ளன. அம்மான் நகரில் தெருத்தெருவாக மன்னரின் படைகளுக்கும் கொரில்லாப்படைகளுக்கும் சண்டை நடக்கின்றது.

இந்தச்சண்டை எப்படி எப்போது முடியும்? அமெரிக்கா இச்சண்டையில் தலையிடுமா? ஜோர்டான் மற்றொரு வியட்னும் ஆகுமா? அல்லது சுமுகமாக எல்லாம் முடியுமா? இக்கேள்விகளுக்கான பதில் சில வாரங்களில் தெரியக்கூடும்,

கொரில்லாக்கள் யார்? இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதியிலிருந்த அரபுகள் அகதிகளாகி லெபனானில் ஒன்றே முக்கால் லட்சமும் சிரியாவில் சுமார் ஒன்றரை லட்சமும், மேற்குக்கரை, ஜெரூஸலேம்இவ்விடங்களில் இரண்டே முக்கால்லட்சமும் ஜோர்டானில் 5 லட்சத்துக்கு மேலாகவும் பாலஸ்தீன அரபுகள் அகதிகளாகி வசிக்கிறார்கள். தங்கள் வீட்டையும் நாட்டையும் விட்டுச் சென்ற இந்த அகதிகளே மனம் புழுங்கி, தங்கள் உயிரையும் துரும்பாக மதித்து, தங்கள் பழைய வீடுகளை மீண்டும் பெற கொரில்லாப்படைகளில் சேர்ந்து போராடுகின்றார்களாம்.

வல்லரசுகள் இங்கு தலையிடவேண்டிய காரணமென்ன? அரபு நாடுகளிலுள்ள எண்ணெய்கிணறுகள் தானும்! எப்படியும் இது மூன்றாவது உலகயுத்தமாக மாறாமல் இருக்கவேண்டும்.

## கிளிநொச்சி கொலை முயற்சி வழக்கு

# குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிக்கு 4 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், வெள்ளி கிளிநொச்சி கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரி படுகாயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ எஸ். டி. கிறெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 69-ம் ஆண்டு மேமாதம் 30-ம் திகதி கிளிநொச்சியில், பெரிய கறுப்பன் கிருஷ்ணன் என்பவர் ஜெகநாதன் என்பவரை கத்தியால் வெட்டி கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் கே. சிவபாக்கியநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

நீதியரசர் தீர்ப்பளிக்கையில் கூறியதாவது: படுகாயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதை மெச்சுகிறேன். திறமைசாலிகளான டாக்டர்கள் இருக்கிறபடியால் கொலைக்குற்றத்திலிருந்து தப்பித்துக் கொண்டீர். வைத்தியர்களின் கெட்டித்தனத்தால், குத்தப்பட்டவர் இறக்கவில்லை. என்ன காரணத்திற்கோகத்தியால் 4 தடவை குத்தியிருக்கிறீர் குத்துவாங்கியவர், உமது மனைவியையும், பிள்ளைகளையும், பேசியபடியால் ஆத்திரமடைந்து குத்தியதாக உமது சார்பாக ஏற்பட்ட அப்புக்காத்து கூறினார். அப்படித்தான் கத்தியால் 4 தரம் குத்த உமக்கு உரித்தில்லை: ஆயுதம் இல்லாதவரை, சீவல் கத்தியால் வெட்டியிருக்கிறீர். மனைவி பிள்ளைகளை பேசியதால் ஏற்பட்ட கோபத்தில் குத்தியதென்ற அடிப்படையில் தண்டனை விதிக்க போகிறேன்,

உமது 41 வயது காலத்தில் நல்லஒழுக்கமாக இருந்திருப்பதை கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன். கோட்டின் நேரத்தை வீணாக்காமல் குற்றத்தை ஒப்புக்கொண்டதையும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன். குற்றத்தை செய்யவில்லை என்று கூறி பொய்யாக வழக்கை நடத்துவதிலும் பார்க்க குற்றத்தை ஏற்றுக்கொண்டதற்கு வழிவகை இருக்கிறது உமக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

அசைஸ் விசாரணை இன்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## யு.என். பி...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சீனாவுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சியாட்டோ என்னும் தென்கிழக்காசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பாகிஸ்தான் சீனாவுடன் நட்புறவுடனிருக்கிறதென்றும் சீனாவுடன் பஞ்சசீலக்கொள்கையை உருவாக்கிய இந்தியாவை சீனா தாக்கியிருக்கிறதென்றும் கூறினார், உண்மையில் மனமுடைந்துதான் நேரு காலமானாரென்றும் திரு ஜயவர்த்தனா சொன்னார்.

உலக விவகாரங்களில இலங்கை போன்ற சிறிய நாடுகள் செல்வாக்கைப் பாவிக்க முடியாதென்றும் சுவிட்சர்லந்து போன்று நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் கூறினார்

வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் திரு, ஜே. ஆரின் கூற்றுக்குக்கண்டனம் தெரிவித்துப் பேசுகையில் பொருளாதார உறவுகளை மட்டும் கொண்டு அரசாங்கத்தின் முடிவுகளைக் கணிக்க முடியாதென்றார். விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கு தார்மீக அரசியல் ஆதரவும் அளிக்கவேண்டியதவசியம் என்றும் திரு. கெனமன் கூறினார்.

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர் எஸ். பெரேரா பேசுகையில் முன்னைய அரசாங்கம் குறுகிய கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருக்கிறதென்றார், கூட்டணி ஆட்சிக்கு வந்த பின் வேலைநிறுத்தம் நடைபெறவில்லையென்றும் ஆனாலும் நன்கு திட்டமிடப்பட்டு அதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதென்றும் கூறினார்.

### பத்திரிகைகள் மீது நடவடிக்கை

# புதுப்பாதை வகுத்த மேதை!

சீரும் சிறப்பும் மிக்க செல்வந்தக் குடும்பத்தி[ல்] பிறந்து நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்த தியாகசீலர்தான் காலஞ்சென்ற பிரதமர் அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. ப...

காலஞ்சென்ற இலங்கைப் பிரதம[ர்] அமரர்திரு. எஸ், டபிள்யு. ஆர், டி. பண்டாரநாயக்காவின் ... தினம் நாளை நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது. அதனை ...

திருமணம் நடைபெறுவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்ததாம். அழைப்பிதழ்கள் எல்லாம் அனுப்புவதற்கு தயாராகிக்கொண்டிருந்தன. அழைப்பிதழ்கள் வைக்கப்பட்டிருந்த

எண்ணங்களையும், விருப்பு வெறுப்புகளையும் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் கொள்கைகளை அமைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை 1951ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைப்பட்டது பிரதமர் பண்டாரநாயக்காவும் கொலை செய்யப்பட்டார். ஸ்திரமான அரசாங்கம் ஏற்பட முடியாமற் போயிற்று. இந்த அவலநிலைக்குக் காரணம், தமிழ்மொழிக்குச் செய்த அநீதியே.

இதை உணர்ந்தவர்கள், மீண்டும் தமிழ்மொழிக்கு முன்பு போல் உரியஇடத்தை அளிக்கத் தீர்மானிப்பதாயின் அதில் வியப்பில்லை. புதிதாக விடுதலைபெற்ற நாடுகளில் இவ்வித அரசியல் தவறுகள் நடப்பது சகஜம். கஷ்டநஷ்டங்களை அனுபவித்தபின் தங்கள் தவறை உணர்ந்து அதைக் கூடிய சீக்கிரத்தில் நீக்கிக்கொள்வதே விவேகம். அதற்கான நல்ல சந்தர்ப்பம் இப்போது கிடைத்துள்ளது. அரசியல் நிர்ணயசபையை அமைத்து, தேசியஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்த முயற்சிகள் நடப்பதாலும், தமிழரின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் நாட்டின் முன்னேற்றத்துக்கு எவ்வளவு அவசியமென்பதை உணர்ந்துள்ள தாலுமே உதவி அமைச்சர் இதை யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாக அறிவிக்க முன் வந்துள்ளார்.

அரசியல் நிர்ணயசபையின் ஆரம்ப விழாவிலே தமிழுக்கும் சிங்களத்தைப் போல் சமமான இடம் அளிக்கப்பெற்றது. சட்டக் கல்வி சிங்களத்தில் மட்டுமன்றி தமிழிலும் அளிக்க ஏற்பாடு செய்திருப்பதால், நீதிமன்ற விசாரணைகள் தமிழிலும் இனி நடைபெறுமென்று

காகப் போராடி வருகின்றனர். தங்கள் மொழி உரிமையை இழக்க அவர்களோ அவர்களது தலைவர்களோ எச்சமயமும் சம்மதிக்கவில்லை. உண்மை என்னவெனில் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர் என்பதுதான்.

மொழிப்பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. பலரும் இப்போது இதைப் பற்றி மீண்டும் விவாதிப்பதே இதற்கு அத்தாட்சியாகும். இதைப் பற்றி புனராலோசனை செய்து நிலைமையை அரசியல் நிர்ணயசபை மூலம் புதியதோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தேசிய ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் மீண்டும் நிலைநாட்ட விரும்புபவர்கள், குற்றச்சாட்டுகள் செய்யாமல், மொழிவிஷயமாகச் செய்யப்பட்ட பெருந் தவறை நீக்க எல்லா முயற்சிகளையும் செய்வதே முறை. குற்றம் யாருடையதென்பது விஷயமல்ல; செய்யப்பட்ட குற்றத்தை நீக்கி, நாட்டில் இரு முக்கிய சமூகத்தவருக்குமிடையே நல்லுறவும் ஒத்துழைப்பும் ஏற்படுத்த வேண்டியதே முக்கியம். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இடதுசாரிக்கட்சிகளும் சேர்ந்திருப்பதாலும் மொழிவிஷயமாக அவர்களுக்கு எல்லாம் தெரியுமாதலாலும் தமிழுக்குச் செய்யப்பட்ட அரசியல் அநீதி கூடிய சீக்கிரத்தில் நீங்க வழிபிறக்குமென்று நம்புவது மிகையாகாது.

## 1200 ரூபா அபராதம்

மட்டுவில், வியாழன்

கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரைத் தடியால் தலையில் தாக்கியதாகவும், அவர் மனைவியின் கன்னத்தில் கையால் அடித்து அவர் தாலிக்கொடியை அறுக்க முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு சாவகச்சேரிப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா எதிரிக்கு ரூபா 1200 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் சாவகச்சேரி கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை தலைமை ஆசிரியரான எஸ். சிவக்கொழுந்தும் அவர் மனைவியும் உதவி ஆசிரியையுமான திருமதி இராசம்மா சிவக்கொழுந்துவும் பாடசாலை முடிந்து வீடுதிரும்பும்போது வழிமறித்து தாக்கியதாகவும் திருமதி இராஜம்மாவின் தாலிக்கொடியை அறுக்க முயன்றதாகவும் நாவற்குழியைச் சேர்ந்த கனகரத்தினம், பீமன் அல்லது வேலாயுதம் என்பவர்கள் மீது சாவகச்சேரிப் பொலிசார் குற்றம் சாட்டியிருந்தனர்.

விசாரணை முடிவில் மாஜிஸ்திரேட் 1ம் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு 1-ம் 2-ம் குற்றச்சாட்டுகளுக்குத் தலா 100 ரூபாவும், 5-ம் குற்றச்சாட்டுகளுக்கு 1000 ரூபாவுமாக மொத்தம் 1200 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். அபராதம் கட்டத்தவறினால் 8 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் [illegible] வெளியிடப்பட்டது.



# நாட்டுக்கு தன்னை அர்ப்பணித்த தியாக சீலர் பண்டாரநாயக்கா

**காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் அமரர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நினைவு தினம் நாளை நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

கே. கதிர்காமநாதன்

சீரும் சிறப்பும் மிக்க செல்வந்தக் குடும்பத்தில் பிறந்து நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்து உழைத்த தியாகசீலர்தான் காலஞ்சென்ற பிரதமர் அமரர் எஸ் டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா!

இந்தியாவில் அரசியல் மேதை காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால்நேரு எப்படிப் பெரிய குடும்பத்தில் பிறந்து கௌரவத்திற்கு ஏற்ற முறையில் வளர்க்கப்பட்டு நாட்டுக்காக கடைசியில் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தாரோ, அதே போன்று பெரிய குடும்பத்தில் பிறந்து கௌரவமாக வளர்க்கப்பட்டு, கடைசியில் நாட்டுக்காக ஓய்வு ஒழிச்சலின்றி வாழ்ந்தவர் பண்டாரநாயக்கா!

### வீட்டில் படிப்பு

சிறுவயதில் பண்டாரநாயக்காவை தகப்பனார் பள்ளிக்கு அனுப்பாமல், கேம்பிரிஜ் சர்வகலாசாலையில்பட்டம் பெற்ற ஆங்கிலேயரிடம் ஒருவரை வைத்து வீட்டிலேயே கல்வி கற்பித்துக் கொடுத்தார். வேறு குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுடன் சிறுவன் பண்டாரநாயக்கா சேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் அவரது தகப்பனார் இப்படிச்செய்தாராம். அதே சிறுவன் பிற்காலத்தில் "பெரிய தனத்தை" யெல்லாம் ஒதுக்கி, உதறித்தள்ளிவிட்டு ஏழைகளுடனும், தொழிலாள வர்க்கத்துடனும் இணைந்து போராடி, தியாகங்கள் பல செய்தாரென்பதை எண்ணும்போது அவரை மேதைகளுக்குள் மேதைகளாக, மனிதருக்குள் ஒரு மாணிக்கமாக நெஞ்சம் நினைக்கச்செய்கிறது.

### விளையும் பயிர் முளையில் . . .

"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பார்கள். இங்கிலாந்திலுள்ள 'ஒக்ஸ்போர்ட்' சர்வகலாசாலைக்குச் செல்லு முன்னதாகவே 'மகாமுதலியா'ரான இவரது தகப்பனார் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவின் மனப்போக்குக்கும் இவரின் கருத்துக்களுக்கும் முரண்பாடு ஏற்படத் தொடங்கியது.

'ஒக்ஸ்போர்ட்' சர்வகலாசாலையில் ஒரு சொற்பொழிவாற்றுவதற்காக இலங்கையில் இருந்தபோதே இளைஞர் பண்டாரநாயக்கா இந்திய சுதந்திரத்தை ஆதரித்து ஒரு சொற்பொழிவைத் தயாரித்துக்கொண்டிருந்தாராம். குதிரையில் அவர் சவாரி செய்துகொண்டிருந்தபோது திடீரென அந்தச் சொற்பொழிவை பேசிப்பார்த்தாராம். குதிரையில் சவாரி செய்கிறேனே என்பதைக்கூட மறந்து கைகளை அசைத்துப் பேசிப்பார்த்தபோது குதிரையிலிருந்து கீழே விழுந்துவிட்டாராம்.

இந்திய சுதந்திரத்தை ஆதரித்து இவர் "ஒக்ஸ்போர்ட்"டில் ஆற்றிய உரைகள் பலரையும் கவர்ந்தன. ஆங்கிலேயரை வியக்கவைத்தது! "ஒக்ஸ்போர்ட்"டில் பட்டம்பெற்ற பின்னர், அங்கேயே "பாரிஸ்டர்" பட்டம்பெற்று இலங்கை திரும்பினார். இலங்கை திரும்பியதும் சிறிது காலம் வழக்கறிஞராக கடமையாற்றினார். தாய்நாட்டுக்கு சேவையாற்ற வேண்டுமென்ற உணர்ச்சி இவரின் இரத்தத்துடன் கலந்துவிட்டதால், அரசியலில் முழுமூச்சாகப் பிரவேசித்தார்.

இந்தியாவை ஜவர்ஹர்லால் நேரு எப்படி இதயபூர்வமாக நேசித்தாரோ, அதேபோன்று பண்டாரநாயக்காவும் இலங்கையை இதயபூர்வமாக நேசித்தார்.

### துடுக்கு

அப்போது மகாதேசாதிபதியாக இலங்கையிலிருந்தவருக்கு பண்டாரநாயக்காவின் தகப்பனார் தனது வீட்டில் விருந்து வைத்தார். அந்தச் சமயத்தில் இளைஞர் பண்டாரநாயக்காவைப் பார்த்த மகாதேசாதிபதி பண்டாரநாயக்காவின் தகப்பனாரிடம் பண்டாரநாயக்காவையும் மகாமுதலியாராக நியமிக்கப்போவதாகக் கூறினாராம். இதனைக்கேட்ட பண்டாரநாயக்கா மகாதேசாதிபதியிடம் தனக்கு அந்த நியமனம் வேண்டாம் என்றும் நாட்டு மக்களுக்காக தான் உழைக்கப் போகிறேனென்றும் கூறினாராம்.

பிரித்தானியஏகாதிபத்தியத்தை இந்நாட்டிலிருந்துவிரட்டியடிக்கவேண்டும் என்ற கருத்தும், இந்தநாட்டில்பிறந்த மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற எண்ணமும் பண்டாரநாயக்காவின் இளம் நெஞ்சத்திலேயே பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது.

### ஒக்ஸ்போர்ட்டில்

பண்டாரநாயக்கா 'ஒக்ஸ்போர்ட்'டில் படித்துக்கொண்டிருந்தபோது சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். ஆசியாவிலிருந்து 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்துக்குச் சென்று கல்வி கற்ற மாணவர்களுள் பல்கலைக்கழக மாணவர் யூனியன் காரியதரிசியாகத் தேர்தெடுக்கப்பட்ட பெருமையையும் இவர் தட்டிக்கொண்டார்.

சாதாரண மக்களின் எண்ணங்களுக்கும், கருத்துக்களுக்கும் பண்டாரநாயக்கா மதிப்புக்கொடுத்தார். அவர்களுடைய விருப்பு வெறுப்புகளைப் புரிந்துகொண்டு, செயலாற்றத் தொடங்கினார். அவர் மக்கள் இதயத்தில் இடம் பெறத்தொடங்கினார்.

### மந்திரி

காலஞ்சென்ற பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா மந்திரி சபையில் ஸ்தலஸ்தாபன மந்திரியாக பண்டாரநாயக்கா கடமையாற்றினார். சாதாரண மக்களுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு இவருக்குக்கிடைத்தது.

பிரபுத்துவக் குடும்பத்தில் பண்டாரநாயக்கா பிறந்தபோதிலும், ஏற்றத்தாழ்வுகளுக்கு மதிப்புக்கொடுக்காமல் மனச்சாட்சிக்கு மதிப்புக்கொடுத்து வாழ்ந்தார்!

### திருமணத்தில் புரட்சி

பண்டாரநாயக்கா சுகாதார மந்திரியாக இருந்த போதுதான் அவருக்குத் திருமணம் நடந்தது.

வதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருந்ததாம். அழைப்பிதழ்கள் எல்லாம் அனுப்புவதற்கு தயாராகிக்கொண்டிருந்தன. அழைப்பிதழ்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் பண்டாரநாயக்காவின் தகப்பனார் சென்று பார்த்தபோது அதிர்ச்சியடைந்து விட்டாராம். அழைப்பிதழ்கள் பலவற்றில் பண்டாரநாயக்காவின் நண்பர்களின் கவரிகள் காணப்பட்டனவாம். அதனை பண்டாரநாயக்கா அவர்களே கைப்பட எழுதியிருந்தாராம்: உடனே தகப்பனார் பண்டாரநாயக்காவை அழைத்து, "திருமணத்தன்று எமது வளவுக்குள் வருவதற்குத் தகுதியில்லாத பலருக்கு நீ அழைப்பிதழ்களை அனுப்புகிறாய். அவர்கள் இத்திருமணத்துக்கு வந்தால், எங்கள் உறவினர்கள் உனது திருமணத்துக்கு வரச் சம்மதிக்கமாட்டார்கள். ஆகையால் இந்த அழைப்பிதழ்களை உனது நண்பர்களுக்கு அனுப்பவேண்டாம்" என்றாராம். தந்தைக்கும் மகனுக்குமிடையில் சிக்கலான பிரச்னை.

தன நண்பர்களை தனது திருமணத்துக்கு அழைக்க வேண்டியதன் அவசியத்தை தனது தகப்பனாருக்கு பண்டாரநாயக்கா எவ்வளவோ விளங்கப்படுத்தியும் தகப்பனார் அவையெல்லாவற்றையும் கேட்கமறுத்துவிட்டாராம்.

பண்டாரநாயக்கா நன்ருக யோசித்துவிட்டு தகப்பனாரிடம் சொன்னார்:

"பத்திரிகையில் விளம்பரம்ஒன்றைப் பிரசுரிப்பதானல் இந்த அழைப்பிதழ்களை அனுப்பாமல் விடுவோம். திருமணத்துக்கான பெரிய ஏற்பாடுகள் எல்லாம் ரத்துச் செய்யப்பட்டுவிட்டதென்றும், திருமணம் ரகசியமான முறையிலேயே நடைபெறுமென்றும் பத்திரிகை மூலம் அறிவிப்போம்'!

'தகப்பனார் இதற்குமேல் ஒன்றும் பேசவில்லை! அழைப்பிதழ்களை அனுப்பச்சொல்லிவிட்டார்.

பண்டாரநாயக்காவின் இந்தப் புரட்சி மனப்பான்மை அவரின் மனோநிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக உள்ளது!'

### சுதந்திரக்கட்சி உதயமானது

1951-ம் ஆண்டை மறந்துவிட முடியாது! சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு என்று கூடச் சொல்லலாம்.

அரசியல் கருத்து வேற்றுமை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து திரு. பண்டாரநாயக்கா பிரிந்து இந்நாட்டு மக்களின்

கொண்டதையும் கவனத்தில்

எண்ணங்களையும், விருப்பு வெறுப்புகளையும் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் கொள்கைகளை அமைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை 1951ம் ஆண்டில் ஸ்தாபித்தார் 1952 ம் ஆண்டு நடந்த தேர்தலில் அவர் எதிர்க்கட்சித் தலைவரானார். ஆனாலும் இவரைத் தொலைத்துக்கட்ட சில சக்திகள் அயராது உழைத்தன: ஆனால் அவர் செல்வாக்கு வளர்ந்தது!

### சரித்திரம் மாறியது

1956-ம் ஆண்டுத் தேர்தலில் முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து அரசு நிறுவினார். மக்களுடைய அரசாங்கம் என உரிமை பாராட்டக்கூடிய விதத்தில் ஆட்சி அமைந்தது!

இந்த மாற்றம் இலங்கைச் சரித்திரத்தில் பெரிய மாற்றம் எனலாம். இலங்கையில் ஏற்பட்ட ஒரு பெரிய அரசியல் பொருளாதார சமூக மாற்றமென்று கூடச் சொல்லலாம், பிரான்ஸில் 1789-ம் ஆண்டு நடைபெற்ற புரட்சியுடனும், ரஷ்யாவில் 1917ம் ஆண்டு நடந்த மாற்றங்களுடனும் இதனை ஒப்பிடலாம் இந்தப் பெருமை திரு. பண்டாரநாயக்கா அவர்களையே சாரும், ஏழைகளின் இன்னல்களைத் தீர்ப்பதற்காகப் பல முற்போக்குச் சட்டங்களை உருவாக்கினார்.

உலகப் பிரதமர்களிடையே அமரர் பண்டாரநாயக்காவும், அமரர் ஜவர்ஹர்லால் நேருவும் அண்ணனும் தம்பியும் போலத் திகழ்ந்தனர். நேருவின் பஞ்சசீலக் கொள்கைகளை உலகெங்கும் பரப்புவதற்கு உறுதுணையாக நின்றவர் திரு. பண்டாரநாயக்கா.

நாட்டுக்காக உண்மையாக உழைத்தவர்களுக்குக் கடைசியில் என்ன பரிசு கிடைக்குமோ அது அரசியல் மேதை பண்டாரநாயக்காவுக்கும் கிடைக்கத் தவறவில்லை? கொடியவனின் துப்பாக்கிக் குண்டு அவரைப் பலிகொண்டது!

அவர் உயரிய கொள்கைகளையும் லட்சியங்களையும் நோக்கங்களையும் யாராலும் என்றும் பலிகொள்ள முடியாது! அது என்றும் வாழும்; வாழ்ந்துகொண்டிருக்கும்

அதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதென்றும் கூறினார்.

பத்திரிகைகள் மீது

## நடவடிக்கை எடுக்கத்தயங்க மாட்டேன்

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் பேசுகையில், 'லூசாக்கா மாநாட்டுச்செய்திகளைச் சில பத்திரிகைகள் கேவலமான முறையில், உண்மைக்கு அப்பாற்பட்டவிதத்தில் வெளியிட்டுள்ளன, இவ்வித சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுப்பதில் தயங்கமாட்டேன்' என்று கூறினார்.

## பாரதி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் இம்மாதம் 29ம் 30ம் திகதிகளில் பாரதி விழா நடைபெறவிருக்கிறது

நல்லை பாரதி மன்றத்தின் சார்பில் நடைபெறும் இவ்விழாவில், 29ம்திகதி சுவாமிநாதத்தம்பிரான் 'பாரதி' பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.


## தேவை

உதவி மனேஜர் ரூபா 1000/- ஆயிரம் பிணைப் பணம் கட்டக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் ரூபா 125/- மாதம் கிடைக்கும் நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும் ஆர். டி. என். ஸ்ரோஸ் அன் சேல்ஸ் ஏஜன்சி, மேல்மாடி, No 3/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2974


## மரண அறிவித்தல்

பா. சிவநேசன்

எனது கனிஷ்ட புத்திரன் இன்று 24-9-70 காலை சிவபதமடைந்துவிட்டார். நாளை காலை 8 மணிக்கு முன்பாக தாவடிப் பிள்ளையார் கோவிலடியிலுள்ள எனது இல்லத்திலிருந்து பூதஉடல் அடக்கஞ் செய்ய எடுத்துச்செல்லப்படும். பா. சாமிரத்தினசர்மா, மேற்பார்வை அதிகாரி, பிரதம தபால் நிலையம், கொழும்பு. 2973


## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விநியோகம் செய்வதற்கும், பத்திரிகை மடிக்கவும் சயிக்கிள் உள்ள பையன்கள் தேவை. நேரில் 28-9-70 திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு வரவும். நிர்வாகி, 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2474


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org